நாட்டுக்கோட்டையாரின் உற்பத்தியும் அவர்களின் சாதியும் முறையும்

ஓர்சே மா. கோபாலகிஷ்ணன்

நற்றமிழ் பதிப்பகம்

திருத்தம்

"அவர்களின் சாதியும் முறையும்"
என்று வரும் இடங்களில் எல்லாம்
- நூலின் தலைப்பு உள்பட -
"அவர்களின் சாதியின் முறையும்"
என்று திருத்தி வாசிக்கவும். -நன்றி

நாட்டுக்கோட்டையாரின் உற்பத்தியும் அவர்களின் சாதியும் முறையும்

ஒர்சே மா. கோபாலகிஷ்ணன்

நற்றமிழ் பதிப்பகம்
எம் 55/12, எம்.ஐ.ஜி. அடுக்ககம்,
முதல் நிழற்சாலை விரிவாக்கம்,
இந்திரா நகர், அடையாறு, சென்னை - 600 020.
✆ 044-24425936

நாட்டுக்கோட்டையாரின் உற்பத்தியும் அவர்களின் சாதியும் முறையும்

ஓர்சே மா. கோபாலகிஷ்ணன்

ISBN: 81-903075-1-7

பதிப்பு	:	2006
விலை	:	ரூ.45.00, US $5
மொத்தப் பக்கங்கள்	:	48
ஒளி அச்சு	:	மா.கோ., சு.அ.
முன் அட்டை வடிவமைப்பு	:	சு. அசோக்குமார், சென்னை - 600 080. செல்: +91-94440 09048
அச்சிட்டோர்	:	கிருஷ்ணா பிரஸ், சென்னை - 600 102. தொ.எ. : 26460024

என் வரலாறு ஆசிரியர்



Jacques Dupuis (1912 - 1997)
ழாக் துய்புய் அவர்களுக்கு

இந்நூல் காணிக்கை

முன்னுரை

1992ஆம் ஆண்டில் நாம் பதிப்பித்த 'இரண்டாம் வீராய்க்கர் நாட்குறிப்பு (1778–1792)' நூலுக்குப் பின் 'ஆனந்தரங்கப்பிள்ளை வி–நாட்குறிப்பு பிறசொற்பத்தி ஆண்டு (1751–1752)', 'ஆனந்தரங்கப்பிள்ளை வி–நாட்குறிப்பு ஆங்கிரச ஆண்டு (1752–1753)' ஆகிய நூல்களும் அண்மையில் வெளிவந்திருக்கின்றன. இவைகளுக்கு உதவி செய்த அனைவருக்கும், என் குடும்பத்தாருக்கும், இந்நூலை அழகான முறையில் அச்சிட்டுக் கொடுத்த கிருஷ்ணா அச்சக உரிமையாளர் திரு. கிருஷ்ணா அவர்களுக்கும், இதற்குக் கவர்ச்சியான அட்டைப்படத்தை உருவாக்கிக் கொடுத்த திரு. சு.அசோக்குமார் அவர்களுக்கும் முதற்கண் என் மனமார்ந்த நன்றிகள். பாரிஸ் தேசிய நூலகத்தில் இருக்கும் சுவடிகளைக் கண்டு படிக்கவும், பிறகு நகல் எடுக்கவும் உதவிய அனைவருக்கும் நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நகரத்தார் அல்லது நாட்டுக்கோட்டையார் என்ற பெயர்களில் அறியப்படுகின்றவர் பற்றிப் பல ஆய்வு நூல்கள் வெளிவந்தவண்ணமுள்ளன. தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் இன்னும் வெளிநாடுகளிலும் இவர்களைப் பற்றி ஆராயப்பட்டு வெளிவந்திருக்கும் ஆய்வுரைகளும் நூல்களும் பற்பல (மிகப் பெரிய எண்ணிக்கை காரணமாக நூற்பட்டியல் கொடுக்கப்படவில்லை).

இச்சமூகத்தார் பற்றிய ஆராய்ச்சிக்கு உபயோகமாக இருக்கும்பொருட்டுப் பதிப்பிக்கப்படும் இந்தத் தமிழ்ச்சுவடி சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன் பாரிஸ் தேசிய நூலகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது (Bibliothèque Nationale, Mss.Occidentaux, Naf.8899). இது தமிழ் மொழியியல், தமிழ்ச் சமூகவியல், தமிழ் வரலாற்றியல் ஆகிய

துறைகளில் பல புதிய விளக்கங்கள் அளிக்கக்கூடிய முக்கியமான விபரங்களைக் கொண்டுள்ளது.

மேற்கூறிய ஆனந்தரங்கப்பிள்ளை, இன்னும் விஜய திருவேங்கடப்பிள்ளை (மூன்றாம் திருவேங்கடப்பிள்ளை), முத்து விஜய திருவேங்கடப்பிள்ளை (நான்காம் திருவேங்கடப்பிள்ளை), இரண்டாம் வீராநாய்க்கர் ஆகியோர்களின் நாட்குறிப்புகளை நாம் ஆய்வு செய்துக்கொண்டிருக்கும் காலத்தில், சில சொற்கள் பற்றியும் சில விடயங்கள் பற்றியும் பல கேள்விகள் எழுந்தவண்ண மிருந்தன. இப்பொழுது சாதி என்று சொல்லுக்குக் கொடுக்கப்படும் பொருள் ஐரோப்பியர் வந்தபோது கிடையாது என்பது, சுமார் 3 நூற்றாண்டுக்கு முன்பிருந்த சுவடிகளின் வாசகங்களில் 'ஸ்திரி சாதி, குருவி சாதி, பிரெஞ்சு சாதி, என்றெல்லாம் சொல்லப்படுவதால், தெளிவாக அறியக்கிடக்கின்றது. இம்மாதிரி அந்த நாட்குறிப்புகளில் இங்குமங்குமாக வரும் 'செட்டிகள்' யாவர், இவர்கள் பெயர் ஏன் இடங்கை–வலங்கையார் சச்சரவுகளில் அடிபடுகின்றது என்பது போன்றவைகளைச் சரியான முறையில் புரிந்துகொள்வதற்கு மேற்கூறிய நாட்குறிப்புகளுக்குப் பின்னும் ஏதாவது கிடைக்கக்கூடுமா என்று தேடிவந்தோம். மேலும், வரலாற்றில் ஈடுபாடுடைய நமக்கு வரலாற்றுவாரியாக இதன் தொடர்ச்சிபோன்று 19ஆம் நூற்றாண்டு முதல் பாதியில் எழுதப்பட்ட சுவடிகள் இருக்கின்றனவா என்று அறியவும் விரும்பினோம்.

அம்மாதிரியே, 'சமணம்' என்ற சொல்லும் அந்தக் காலங்களில் பௌத்த சமயத்தினருக்கும் பொருத்தமாக இருந்தது என்பதை ஈண்டு நாம் குறிப்பிட விரும்புகிறோம்.

இவ்விதமானக் கேள்விகளுக்குச் சரியான விடைகளைக் காணும் முயற்சிகளை நாம் மேற்கொண்ட சமயம் சில பதில்களோடு இந்தச் சுவடி கிடைத்தது. இச்சுவடியும் புதுச்சேரியில் பத்தாண்டுகள் வாழ்ந்து, இங்கேயே மறைந்த பிரெஞ்சு அறிஞர் எதுவார் அரியேல் (Edouard Ariel, 1818-1854) எடுத்து வைத்த நகலே என்பதைக் கவனிக்கும்போது, அன்னாருக்கு தமிழ்கூறு நல்லுலகம் எத்துணை நன்றிக்கடன் பட்டிருக்கிறது என்பதை உணரலாம். ஆனால், இந்நகலும்

மேலும் இதுபோன்ற வேறு சில நகல்களும் மற்ற பிரஞ்சுச் சுவடிகளுடன் சேர்த்து (அப்போது மொழிவாரியாகப் பிரித்து வைக்கமுடியாத நிலையில் இருந்திருக்கலாம்) பாரிஸ், தேசிய நூல்நிலையத்தின் மேற்குத்திசைச் சுவடியகத்தில் (Occidental Manuscripts Department, Bibliothèque Nationale, Paris) இருந்தது என்பதைக் குறிப்பிடவேண்டும்.

எதுவார் அரியேலின் முயற்சிகளின் விளைவாகக் கிடைத்த மேற்கூறிய நால்வரின் நாட்குறிப்புகள் 18ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் எழுதப்பட்டவை. இந்தச்சுவடியோவெனின் 19ஆம் நூற்றாண்டின் நடுவில் எழுதப்பட்டதாகும். எழுத்துமுறையிலும் சொற்களை உபயோகிக்கும் விதத்திலும் 19ஆம் நூற்றாண்டின் முதற்பாதியில் நடந்தேறிய சம்பவங்களைக் குறிப்பிடும் வகையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டதைக் காணமுடிகின்றது.

பாரிஸ், தேசிய நூல்நிலையத்தி லிருக்கும் 18ஆம் நூற்றாண்டுச் சுவடிக லனைத்தையும் நம்முடைய வாழ்நாளில் செம்பதிப்புகளாக வெளிக்கொண்டுவர முடியாது என்பதை நன்குணர்ந்து, வரலாற்றியல், சமூகவியல் ஆகியவற்றில் உண்மையான ரசனையும் ஆய்வுத்திறனும் கொண்ட இளையோரைத் தேடிச்சென்று சில வழிமுறைகளைக் கூறி உதவலாம் என்ற நம்பிக்கையுடன் பலவிடங்களுக்குப் போய்க் கேட்ட ஆண்டுகள் பலவுண்டு. அண்மையில் 2003ஆம் ஆண்டிலும் கூட தேடிக் கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்தோம். பொருளாதாரத்தில் ஏற்றம் அடைந்துவரும் தமிழ்நாட்டில் வாழ்வாதாரத்துக்குச் செய்யும் ஆராய்ச்சிமுறையைத் தாண்டி, (மயிலை சீனி வேங்கடசாமி போன்று) உண்மையான மன உந்துதலில் செய்யத் தொடங்கும் ஆய்வுமுறைக் காலம் விரைவில் வருமாக.

இச்சிறு சுவடியையும் செம்பதிப்பாகக் கொணரத் திட்டமிட்டு, பெயரடைவுக்குத் தேவை இல்லாமல், வாசகத்தில் வேற்றுமொழிச் சொற்கள் இரண்டொன்றைத் தவிர வேறு இல்லையாதலால், அனைத்து கருத்துகளையும் இந்த முன்னுரையிலேயே கொடுக்கின்றோம்.

இது சில நகரத்தார் கொடுத்த விபரங்களைக் கொண்டு ஒரு புதுச்சேரிக் கிறிஸ்துவர் 1840ஆம் ஆண்டு வாக்கில்

'நாட்டுக்கோட்டையாரின் உற்பத்தியும் அவர்களின் சாதியும் முறையும் மைத்தும் விபரம்' என்ற தலைப்பில் எழுதியிருப்பது சில அகச்சான்றுகளால் தெரியவருகின்றது. தமிழ்மொழி பற்றியும் தமிழ்நாடு பற்றியும் அறிய ஆவல் மிகுந்திருந்தப் பிரஞ்சு அறிஞர் எதுவார் அரியேல் இதையும் நகலெத்து வைத்திருக்கின்றார்.

இச்சுவடியின் வாசகத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம் : ஒன்று – பழக்கவழக்கங்கள், இரண்டு – பூர்வீகம். அதற்குப் பின் ஏறக்குறைய கடைசியில் வரும் அடிக்குறிப்பில் வரலாற்றுச் செய்தியொன்றும் இருக்கின்றது.

முதலில், பழக்கவழக்கங்கள் பகுதியில் நாட்டுக்கோட்டையார் பெயர் வந்தது பற்றியும் (ப23), மதுரைக்கும் தஞ்சைக்கும் இடையே இருக்கும் நாச்சியார்பட்டி, கரையாம்பட்டி, கோட்டிறபட்டி போன்ற பட்டிகள் பற்றியும் (ப.23) சில விளக்கங்கள் இருக்கின்றன. நாட்டுக்கோட்டையாருடைய மதம் முக்கியமாக சைவம் (ப24) என்பதும் கூறப்படுகின்றது.

பிறகு, கலியாணம் நடத்தும் முறை மிக விரிவாகக் கூறப்படுகின்றது : தாலியைப் பெண்ணின் கழுத்தில் கட்டும் விதம் (ப26), சுத்த போசனம் சாப்பிடுவது (ப27), பட்டப்பகலில் மாப்பிள்ளை மாத்திரங் குதிரையேறிக்கொண்டு ஊர்கோலம் வருவது (ப.27), ஒவ்வொரு வீட்டுத் தெருவாசல்ப்படியிலும் மஞ்சள் தண்ணீரை வெங்கலச் சட்டியிற் கொண்டுவந்து ஆலாத்தி யெடுப்பது (ப27), பெண் பெரிசாயிருந்தாலும் அந்தப் பெண்ணைக் கையால் தூக்கி மாப்பிள்ளைக்குக் காட்டுவது (ப27), மணையில் மாப்பிள்ளையையும் பெண்ணையும் உட்காரவைத்து அவர்களுக்கு முன் இருக்கும் ஒரு வெங்கலச் சட்டியில் தண்ணீர் விட்டு அதில் போட்டிருக்கும் பூக்களை குருவும் மற்றவர்களும் எடுத்து மாப்பிள்ளை, பெண் இருவர் முழங்காலிலும் முழங்கையிலும் தோளிலும் உச்சந்தலையிலும் வைத்து, பிறகு பக்கத்தில் போடுவது (ப.27), பெண்ணையும் மாப்பிள்ளையையும் கைகோர்த்துக்கொள்ளச் செய்வது (ப28) ஆகிய சடங்குகளை விவரித்த பின், அவர்களுடைய பழக்கம் ஏழு நாளையக் கலியாணமாகையால்

அந்நாட்களில் உறவினர் அனைவருக்கும் சாப்பாடு போடுவதே முக்கியம் என்பது சுட்டப்படுகின்றது (ப.29). கலியாணத்தில் தாலி கட்டுகிற முதல் நாள் தவிர மற்ற நாட்களில் கொழுத்த கிடா அடித்து சாப்பிடுவதும் முக்கியமாகச் சொல்லப்படுகிறது (ப.30).

வண்ணானுக்கும் (ப.29), பிராமணனுக்கும் என்னவென்ன கொடுக்கப்படுகின்றது (ப.29) என்பதையும் அறிகின்றோம்.

கலியாணம் பண்ண பிறகு வரும் முதல் கார்த்திகைப் பொங்கலில் மாப்பிள்ளை வீட்டில் சாப்பிடுவார்கள் (ப.30).

பெண்ணுக்குத் முதல் பிள்ளை உண்டான ஆறாம் மாதத்தில் அவள் தாய் வீட்டார் சூல் வரிசையாகச் சில பலகாரங்களைக் கொண்டுபோய் மாப்பிள்ளை வீட்டில் யெல்லாரும் கூடியிருந்து சாப்பிடுவது (ப.30), ஏழாம் மாதத்தில் பெண்வீட்டுக்காரர் வந்து பெண்ணைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய் பிள்ளைப்பேறின் செலவை தங்களுடையதாகச் செய்வது, பிள்ளை பிறந்த ஒன்பதாம் நாள் அறை கழித்த பின்பு நல்ல நாள் பார்த்து புருஷன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வருவது (ப.30) பற்றியும் சொல்லியிருக்கின்றது.

ஒரு வயதுக்குள்ளே பிள்ளைக்கித் தலைமுடி எடுக்கும் சடங்கு தகப்பன் வீட்டில் நடக்கும் (ப.30). அன்று கோவிலுக்குக் காணிக்கையும் பிச்சைக்காரருக்குச் சாப்பாடும் தான தர்மமும் செய்யப்படும் (ப.31). இந்த சடங்குக்குப் பிறகு பிள்ளைக்கு மூணு வயசு ஆகு முன் காது குத்துகிற சடங்கு நடக்கும் (ப.31).

கலியாணம் பண்ணின அல்லது கலியாணம் பண்ணாத பெண்ணாயிருந்தாலும் ருதுவானால் (ப.31) என்ன சடங்கு செய்வ தென்பது சொல்லப்படுகின்றது.

பிறகு, இறப்பு சடங்கு விபரங்கள் வருகின்றன. தாரம் இழந்தவன் மறு கலியாணஞ் செய்துக்கொள்ளும் போது முதல் கல்யாணத்தைவிடக் குறைந்த செலவில் நடக்கும், பரியம் மட்டும் இரட்டிப்பாக இருக்கும் (ப.31). தாரம் இருக்க மறு கலியாணஞ் செய்துக்கொள்ள வேணுமானால், முதற் பெண்சாதியின் இசைவும் அதற்குத் தகுந்த காரணங்களும் உறவினருடைய சம்மதமும் தேவை (ப.31).

ஆனால் பெண் விதவையானால் எந்த காரணத்தைக்கொண்டும் மறுகல்யாணம் செய்துக்கொள்ளக் கூடாது (ப.31)

ஏழு வயதுக்குக் குறைந்த ஆண்பிள்ளை அல்லது பெண்பிள்ளை இறந்தால் (ப.32), கல்யாணம் பண்ணாத இளைஞன் இறந்தால் (ப.32), கல்யாணம் ஆகாத பெரிய பெண் இறந்துபோனால் (ப.33), கணவன் இருக்கக் கல்யாணமான பெண் இறந்துபோனால் (ப.33), கைம்பெண் இறந்துபோனால் (ப.33) செய்யவேண்டியவை முறையே சொல்லப்படுகின்றன. 16ஆம் நாள் கருமாதி சடங்கு செய்யப்படும் (ப.33).

பெண்சாதி இருக்கக் கணவன் இறந்துபோனால் (ப.34), இறந்த 11ஆம் நாள் பெண்சாதியின் தாலியை வாங்கும் சடங்கு (ப.34), பிறகு பெண்சாதிக்குப் பிள்ளைகளிருந்தால் (ப.34) செய்யவேண்டியவை, பிள்ளை இல்லாம லிருந்தால் அவளுக்கு 30 பொன்னுக்குக் குறையாமல் 'கைம்பெண்கூறு' கொடுப்பது (ப.34) பற்றிய விபரங்கள் வருகின்றன.

தாரம் இழந்தவ னிறந்துபோவது (ப.34) மறக்கப்படவில்லை.

இறந்தவர்கள் நினைவாக வருஷாவருஷம் தெவஷம் கொடுக்குறதும் உண்டு.

இறப்புக்குப் பின் அதிகாரம் ஏற்பு, பங்குகள் பற்றிய குறிப்புகளும் வருகின்றன. தகப்பன் உயிரோடிருக்கிற வரையில் பிள்ளைக்கு ஓர் அதிகாரமும் இல்லை (ப.35). 16 வயதுக்குக் குறைந்த பிள்ளை எந்தவொரு தஸ்தாவேசிலும் கையெழுத்து போடக்கூடாது. அவர்கள் தங்கள் சாதியிலுள்ள பெரிய மனிதர்கள் சொற்படி கேட்டு நடப்பதே முறை (ப.35).

தாய்தகப்பன் இல்லாத பிள்ளை மிகவும் இளவயதினனாக யிருந்தால், தகப்பன் ஆஸ்தியை ஊரிலுள்ள பெரிய மனிதர் அவன் பெரியவனாகிற வரையில் காப்பாற்றி வைத்திருந்து, கடைசியில் ஆஸ்தியின் வட்டியு முதலுமாகக் சேர்த்து அவனிடம் கொடுத்துவிடுவது சொல்லப்படுகின்றது (ப.35).

தகப்பன் ஆஸ்தி பிள்ளைக்குச் சொந்தம். எத்தனை பிள்ளைகள் இருந்தாலும் சரிபங்காய்ப் பிரிப்பார்கள் (ப.35). முதல் தாரம்,

ரெண்டாந்தாரமிருந்தால் ஆஸ்தியை எல்லா பிள்ளைகளும் பங்கு பிரித்துக்கொள்ளுவார்கள்.

பிள்ளைக ளில்லாவிட்டால் பெண்சாதியே ஆஸ்திக்குப் பாத்தியமுள்ளவ ளாவாள் (ப.36)

அவர்களுக்குள் பிரச்னைகள் ஏற்பட்டால், தங்கள் நகரிலிருக்கும் பெரிய மனிதரிடத்தில் கொண்டுசென்று தீர்த்துக்கொள்வது அவர்களது கட்டுப்பாடு (ப.36). பொதுவாக, அவர்கள் ஆங்கிலேயரின் நீதிமன்றத்துக்குப் போவதில்லை. தீர்ப்பு ஏற்க முடியாத சில சமயங்களில் மட்டுமே வெள்ளைக்காரரிடம் சென்று நீதி பெறுவார்கள் (ப.37). இதற்கு ஓர் உதாரணம் சொல்லப்படுகிறது: மதுரையில் இருந்த கலக்டர் தேவர்கோட்டையில் அடிதடி பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒரு நிலையத்தை வைத்தபோது, அந்நிலையம் அங்கு நான்கு ஆண்டு காலமாக இருந்தும் ஒரு சச்சரவுக்கும் நீதி கொடுக்கவேண்டிய நிலை ஏற்படாததால் அந்த நிலையம் இருப்பது வீண் செலவென்று கண்டு அதை எடுத்துவிட்டது குறிக்கப்படுகின்றது (ப.37)

மற்றபடி அவர்கள் ஓர் ஆங்கிலேய வெள்ளைக்காரரையும் கையெடுத்து வணங்குவதில்லை. இது பற்றி அவர்களுடையப் பூர்வீகத்தைச் சொல்லும் பகுதியில் விளக்கப்படுகின்றது (ப.37).

1850ஆம் ஆண்டு வாக்கில் அவர்கள் வாழும் இடம், அங்கிருக்கும் சிற்றூர்களின் மொத்தத் தொகை, அந்த நாட்டில் இருக்கும் கோயில்களின் தொகை, அந்நாட்டின் புஞ்சை மண்வளம் (ப.38) பற்றிய குறிப்புகள் உள்ளன.

அவர்கள் சாதிப் பெண்கள் சடங்கு நாட்களில் மாத்திரம் சிவப்பு மாம்புள்ளி சேலை அல்லது பட்டு பிடவைகள் கட்டி, மற்ற நாட்களில் வெள்ளைநிறப் பிடவையே கட்டும் பழக்கமுடையவர்கள். முந்தைய காலத்தில் மார்பு மூடாமல் இருந்தவர்கள், 1850ஆம் ஆண்டுகளில் மாராப்புப் போடாமல் மார்புக்கு குறுக்கே ஒரு முந்தாணை கட்டிவந்தனர் (ப.38) என்பது அறியக் கிடக்கின்றது.

நகையோவெனில், காதில், கழுத்தில் (திருமாங்கால்யச் சறடு), இளவயதினர் கையில் கங்கணமும் போட்டார்களாம் (ப.38).

வேலையைப் பற்றிச் சொல்லும்போது, பெண்களுக்கு பருத்தி அரைப்பதும், பஞ்சு விற்பதும், நூல் நூற்பதும் பிறகு அடுத்த கிராமங்களில் விற்றுவருவதுமே வேலையென்றுக் குறிப்பிட்டு, ஆண்பிள்ளைகளே சமையல் வேலைகளைச் செய்வார்கள் என்றும் அவர்கள் பெண்களைவிட மிக நேர்த்தியாய் சமையல் செய்வார்கள் என்றும் அறிகின்றோம் (ப.38).

ஆண்பிள்ளைகளுக்கு குடுமி கிடையாது, காது தொள்ளைக் காதா யிருக்கும். சிலர் மெத்த அரிதாய் கடுக்கன் போடுகிறார்கள். சில முதலாளிகள் கையில் பொன் மோதிரம் போடுகிறார்கள். பெரிய மனிதர் வண்டித் தலைப்பாகையும் மற்றவர்கள் முண்டாசும் கட்டுகிறார்கள் (ப.39). இடையில் ஒரு முண்டும் மேலே ஒரு 6 முழவஸ்திரமும் போட்டுக்கொள்வதே அவர்கள் உடையும் முறை. வெளித்தேசங்களுக்குப் போய் மற்ற தமிழரைப் பார்த்து வேஷ்டியும் உயர்ந்த அங்கவஸ்திரமும் போடுகிறார்கள். நாட்டுக்கோட்டையாரைக் காது தொள்ளையாக இருப்பதில் அறிந்துக்கொள்ளலாமாம் (ப.39).

இரண்டாவது பகுதியில் அவர்களுடையப் பூர்வீகத்தைக் கூறும்போது, முதலில் சோழநாட்டில் இருக்கும் காவேரிப்பட்டணத்தில் வசித்திருந்த வேளாளர் தங்களுடைய செழுமையான வியாபாரத்தினாலே செட்டி யென்கிற பெயர் பெற்றார்கள் என்று சொல்லப்படுகின்றது. அப்போது ராஜா முதலான பெரியோர்களுக்குக் கையெடுத்து, தலைகுனிந்து வணக்கஞ் செய்யாத சாதியா யிருக்குறார்கள் என்பதைக் கேட்ட ராஜகுமாரன் அதைச் சோதிக்கவேணு மென்று எண்ணினான் (ப.39). இச்சோதனையில் தலைகுனிந்து வணக்கஞ் செய்யாத முறையில் நடந்துகொண்டபின், ராஜகுமாரன் தங்களைத் தண்டிக்கக்கூடும் என்று பயந்து, தாங்கள் வசிக்குமிடத்தை கொளுத்திவிட்டு அதில் பலர் விழுந்து இறந்துபோனார்களாம் (ப.40). மற்றவர் தங்கள் உடைமைகளையும் தாங்கள் பூசை பண்ணுகின்ற மரகதப் பிள்ளையாரையும் எடுத்துக்கொண்டு, தெற்கு நோக்கிச் சென்று மலையாளத்தில் கோட்டாறு(?) என்கிற ஊரில்

போய்ச் சேர்ந்து, அவடத்தில் அரியூரான் (ப.40) என்ற பெயருடன் வாழ்ந்துவருவது அறியக்கிடக்கின்றது.

நெருப்பில் இறந்துபோனவர்களின் சிறு பிள்ளைகள் 1011 பேர் தங்களுக்குப் படிப்பு சொல்லிக் கொடுத்த பிராமண உபாத்தியாயர் வசத்தில் இருந்தார்கள். தெற்கே மதுரை நாட்டின் பாண்டிய ராஜா தன்னுடைய தேசத்தில் செட்டிமார்கள் இல்லை என்று வெகு காலமாய்க் கவலைப்பட்டிருக்கின்றதை அந்தப் பிராமணன் அறிந்து, அந்த ராஜாவிடம் அப்பிள்ளைகளை அழைத்துக்கொண்டுவந்து விட்டபோது (ப.40), பாண்டிய ராஜா மனமகிழ்ந்து அவர்கள் குடியிருப்பைத் 'தெரிந்துகொள்ள'ச் சொன்னான்.

ஆண்பிள்ளைகள் மாத்திரம் வெளியிடங்களுக்கு வேலை காரணமாகப் போனால், போன ஓர் ஆண்டுக்குள்ளே திரும்பி வரவேண்டு மென்றும் (ப.41), பெண்பிள்ளைகள் ஒருக்காலும் ஓடம் ஏறி ஆற்றுக்கரை தாண்டக்கூடா தென்றும் (ப.41) பிரமாணிக்கம் கேட்டு, அதை ஒப்புக்கொண்டு அவர்கள் முதலில் தேவர்கோட்டையில் குடியேறினார்கள். அந்த ஆண்பிள்ளைகளுடன் பெண்கள் வராததினாலே அப்பொழுது அந்தப் பக்கங்களில் இருந்த கள்ளர், மறவர், சாணார், அகம்பிடியார், ஒட்டர் ஆகியோருடைய சாதிப் பெண்களைக் கல்யாணம் பண்ணிக்கொண்டார்கள் (ப.41), போதுமான ஜனப் பெருக்கம் ஏற்பட்டபின் அம்மாதிரிக் கல்யாணங்களை விட்டு, தங்களுக்குள்ளே சம்பந்தம் பண்ணிக்கொண்டு, தங்களுக்கு இளையாத்தங்குடியார் என்ற பெயரை வைத்துக்கொண்டார்கள் (ப.42).

வெள்ளாழப் பெண்களைக் கலியாணஞ் செய்திருந்தால் மாமிசம் சாப்பிடுவர்களாக யிருக்கமாட்டார்கள் என்றும், தங்களை நடத்திக் கொள்வதற்கு வேறு சாதியின் முறைமையை யெடுத்துக்கொள்ளாமல், தங்கள் சாதியில் 10 பெரியவர்கள் செய்கிற தீர்மானப்படிக்குக் காரியங்களைத் தீர்த்துக்கொள்கின்றனர் என்றும் அறிகின்றோம் (ப.42).

அவர்களுடைய கட்டுப்பாட்டுக்கு அடங்காதவர்களை நீக்கிவிடுவதாகவும், அப்படி நீக்கப்பட்டவர்கள் தென்பிறாந்தியங்களில் சுந்தரத்தானென்னும் பெயருடன் வாழ்ந்துவருவதாகவும் அறிகின்றோம்

(ப.42). நாட்டுக்கோட்டையா ரென்று அழைக்கப்பட்ட இளையாத்தங்குடியார் பாண்டிய ராஜாவிடம் சத்தியம் பண்ணிக் குடுத்தபடி நாளதுவரையில் தங்களுடையப் பெண்டுகளை ஓடம் ஏறி வெளியூருக்குச் செல்ல விடுவதில்லை, ஆனால் சுவடி எழுதப்பட்ட காலத்தில் கோவில்கள் இருக்கும் திருவண்ணாமலை, சிதம்பரம் முதலிய திருத்தலங்களுக்கு அவர்களை ஓடமேற விடாமல் ஆற்றில் இறங்கி அழைத்துக்கொண்டு போவதாக் குறிப்பிட்டுள்ளது (ப.42).

காவேரிப்பட்டணத்தி லிருந்த மரகதப்பிள்ளையார் சிலையை எடுத்துக்கொண்டு மலையாளத்தில் இதுவரையில் வேளாளர் ஆச்சாரம் மாறாமல் வாழ்ந்து வருபவர்களுக்கும் இளையாத்தங்குடியார்களுக்கும் அந்த மரகதப்பிள்ளையாரை காவேரியப்பன்பட்டணத்திலிருந்து கொண்டுவந்த காரணத்தினால் இரு பங்காளி சாரார் சச்சரவுகள் ஏற்பட்டதாக அறிகின்றோம். (ப.43).

வலங்கையார் பக்கமோ அல்லது இடங்கையார் பக்கமோ சேராமல் பொதுவாக யிருந்ததால் ஏறக்குறைய வேளாளரைப் போலேயும் 'வருவதை அறிவான் வெள்ளாள' னென்று சொல்லும் சுலோகத்தைப் போலே அவர்களுடைய குணங்களை நோக்குங்கால், உண்மையான வேளாளர் என்று சொல்ல முடியாவிட்டாலும் அவர்களை ஒரு வகை வகுப்பான வேளாளர் என்று சொல்லவேண்டும் என்று கூறப்படுகிறது (ப.43). அவர்களைப் பிராமணர், சத்திரியர், வயிசியர், சூத்திரர் என்ற வகையில் சேர்க்க முடியாததினாலும், தென்பிறாந்திய வழக்கப்படி ஆண்பிள்ளைகள் காதறுத்து வளர்த்திருக்கிறபடியாலும் அவர்களைச் சாணார் என்று தவறாகச் சொல்லுவதாகவும் குறிக்கப்பட்டிருக்கிறது (ப.44). இதன்றி, தஞ்சை சமஸ்தானம், ஆற்காட்டு சுபா ஆகிய இடங்களில் வசிக்கும் வலங்கையாரோ அவர்களை இடங்கை பாரிச செட்டியைப் போல் எண்ணி, அவர்கள் ஊர் வீதிகளில் பல்லக்கு முதலான வாகனத்தில் ஏறக்கூடா தென்பது சரியல்ல என்று சொல்லப்படுகின்றது (ப.44). 18ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இரண்டாம் வீரநாய்க்கர் நாட்குறிப்பிலும் அந்த நூற்றாண்டு கால மற்ற சுவடிகளிலும் இது போன்ற சச்சரவுகள் நடந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கோட்டையார் **சனத்தொகை** ஏறக்குறைய 50,000 இருக்கும் என்றும், தங்கள் நாட்டில் வேளாண்மையும் வியாபாரமும் வெளித் தேசங்களில் வியாபார மாத்திரம் செய்கிறார்கள் என்றும் அறிகின்றோம் (ப.44).

அவர்களுடைய குணங்களைப்பற்றி எழுதும்போது, அவர்களிடம் பொய், மாறுபாடு இல்லையென்றும். நம்பிக்கையானவர்கள் என்றும், உயிரை விட நாணையத்தைப் பெரிதாக எண்ணுகிறவர்கள் என்றும். வீண்பேச்சு, குடி, சூத்திப்பழக்கம் கிடையாதென்றும் (ப.44), வியாபாரத்தில் வருகின்ற லாபத்தில் பலவிதத் தர்மங்களைச் செய்வதாகவும் மிகுந்த கட்டுப்பாடுடையவர்கள் என்றும், அதை மீறி நடக்கப் பயப்படுபவர்கள் என்றும் சொல்லப்படுகின்றது. 1847ஆம் ஆண்டளவில் இருந்த ஆங்கில ஆட்சியில் அவரவருக்குச் சுதந்திரம் இருந்தாலும் இந்தச் சாதியார் மட்டும் தங்கள் பெரியோர்களுடைய கட்டுப்பாட்டுக்கு அடங்கி வாழ்வதாக் குறிப்பிட்டிருக்கின்றது (ப.45).

அவர்கள் சாப்பிடும் கலத்துக்கு எச்சில் பார்ப்பதில்லை, அவர்கள் சாதிக்குள் ஒருவர் சாப்பிட்ட கலத்தைக் கழுவிவிட்டு மற்றொருவர் சாப்பிடுவது பழக்கம் (ப.47). நெல் மற்றும் புஞ்சைத் தானியங்கள், மாடு தவிர ஆடு, பன்றி முதலான மாமிசங்கள் மற்றும் மரகறிகள் ஆகியவற்றை வித்தியாசம் இல்லாமல் சாப்பிடுவார்கள்.

அவர்களுடைய வீடுகளிற் சில கல்லால் கட்டப்பட்டும் மற்றவை குச்சு வீடுகளுமாகவும் இருக்கும். அவர்கள் வீட்டில் ஒரு விளக்கு வைத்தால் அதன் வெளிச்சம் வீடு முழுதும் பிரகாசிக்கும்படியாக கட்டப்பட்டிருக்கும்.

அவர்களுடைய மொழி தமிழ். அம்மொழியை வாசிக்கவும் எழுதவும், கணக்கு வைக்கவும் கற்றுக்கொள்கின்றார்கள் (ப.46). ஆண்பிள்ளைகள் படிக்கின்றார்கள், பெண்கள் அவ்வளவாக படிப்பதில்லை (ப.38 கு.13).

திரவியம் உண்டானது பற்றிய அடிக்குறிப்பில் சொல்லப்படுவதாவது: இவ்வளவு பொருள் படைத்திருப்பவராக ஆவதற்கு எவ்வளவு ஆண்டு

காலம் வேண்டியிருக்கும் என்ற கேள்வி எழுந்து, சுமார் முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்கு முன் மிகவும் ஏழையாய் இருந்தவர்களுக்கு இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வளவு அதிகமாகப் பொருள் உண்டான விதம் பற்றி யோசிக்கும்போது, ஏதோ ஒரு பெரிய தொகை அவர்களுக்குக் கிடைத்திருக்கவேண்டும் என்ற யூகத்தில் காரணம் கொடுக்கப்படுகின்றது (ப.47).

சிவகங்கைச்சீமையை ஆண்ட 'உய்யத்தேவ'ருடைய பிள்ளைகளுக்குச் (ப.45) சேரவேண்டியதை எடுத்துக்கொண்ட 'சின்னமருதன், பெரிய மருதப்பன்' (ப.45 கு.15) எனும் சேர்வைக்காரருடன் இளையாத்தங்குடியாரில் சிலருக்கு நல்ல பழக்கம் இருந்தது. அப்போது பாஞ்சாலங்குறிச்சி 'ஊமையன்' (ப.45 கு.15) அந்த சேர்வைக்காரர்களின் உதவியுடன் ஆங்கிலேயரைப் பகைத்துக் கொண்டதால், ஆங்கிலேயர் ஊமையனையும் சேர்வைக்காரர்களையும் பிடிக்கப் பெருமுயற்சிகள் எடுத்துக்கொண்டுவந்தனர். இதை சேர்வைக்காரர்கள் அறிந்தவுடன் தங்கள் கசானா திரவியத்தைத் தங்களுக்கு நம்பிக்கையுள்ள நாட்டுக்கோட்டை செட்டியார்கள் வழியாக காளையார்கோவில் காட்டில் புதைத்துவைக்கும்படிச் செய்தார்கள். ஆங்கிலேயர் '1802ஆம் ஆண்டு' ஊமையனைப் பிடித்துக் கொல்வதற்கு முன், அந்த சேர்வைக்காரர்களையும் பிடித்துக் கொன்று, உய்யத்தேவன் பிள்ளைகளுக்குப் பட்டங் கட்டிவைத்தனர் (ப.46 கு.15). நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் நல்ல கட்டுப்பாட்டுடன் இந்த ரகசியத்தைக் காப்பாற்றி, புதைத்திருந்த திரவியத்தை எடுத்துக் கொண்டுவந்து தங்களுக்குள் பங்கு பிறித்து, 7, 8 ஆண்டு காலம் வெளிக்காட்டாமல் இருந்து, பிறகு சிறிது சிறிதாக அங்கே வியாபாரம் செய்து, அதன் பிறகு நல்ல பெயர் பெற்றபின் வெளிநாடுகளுக்கும் சென்று வியாபாரஞ் செய்துவருகிறார்கள். வியாபாரத்தில் அதிக லாபம் தேடாமல், பணத்தை அதிக வட்டிக்கு விடாமல், வியாபாரத்தில் வரும் லாபத்தை அனேகருடன் பிறித்துக்கொண்டு வருவதும் சுட்டப்படுகின்றது. மனத்திடம் உள்ளவர்கள், பட்டினி, பசி தாங்குகிறவர்கள் (ப.47), எப்பொழுதும் அமைதியைத் தேடுகிறவர்களான அவர்கள் தங்களிடத்தில் நாணையம் தப்பி நடந்துகொண்டவருடன் மறுபடி பழக்கம் வைத்துக்கொள்வதில்லை.

அவர்கள் மா நிறம் அல்லது கறுப்பு நிற முள்ளவர்கள். அவர்கள் சாதியில் ஒருவராவது மிதுவரையில் கிறிஸ்துவ மதத்துக்கு மாறினதில்லை.

இவர்களின் பூர்வீகத்தைப் பற்றி யோசிக்கிறதைவிட இவர்கள் குணாதிசயங்களைப் பார்க்கவேண்டும் என்றும், தமிழகத்தில் இருக்கும் மற்ற பல சாதிகளைப் பார்க்க இவர்கள் நல்லகுணம் உள்ளவர்க ளென்றும் குறிப்பிடப்படுகின்றது.

கடைசியில் நகலைச் சரிபார்த்தவர்

'1847 ஆம் வரு. கிடங்கு உ

வேலஞ்செட்டி முத்துக்கறுப்பன் செட்டி இராமன் செட்டி தெனஞ்செட்டி னாறாயணசெட்டி அழகப்ப செட்டி (ப.48)

இது ரெண்டும் பத்து வருஷம் மிருக்குது'

என்று குறிப்பிட்டெழுதியிருப்பதால், இந்த ஆறு பேர்களும் சுவடி எழுதியவருக்கு விபரங்கள் கொடுத்தவர்களாக இருக்கவேண்டும் என்று கருத இடமுள்ளது.

இந்தச் சுவடியில் அக்கால வழக்குச் சொற்கள் சில இருக்கின்றன: பூணல், கைம்பெண்கூறு, சுந்தரத்தான், ஊமையன், சின்ன மருதன், பெரிய மருதப்பன், காவேரியப்பன்பட்டணம் போன்றவை.

அடிக்குறிப்புகளை நாம் வரிசை எண் கொடுத்து பதிப்பித்துள்ளோம்.

இதைக் கவனமாகப் படிக்கும்போது மற்ற பல கருத்துகளும் கேள்விகளும் எழுகின்றன.

கிறிஸ்துவ ஆசிரியர் ஏன் இதை எழுதினார், நகரத்தார்களில் சிலர் எந்தச் சூழ்நிலையில் இந்தச் செய்திகளைக் கொடுத்தனர், அவர்கள் கூறும் பூர்வீக வரலாறு உண்மையானதா, அதற்கு வேறு ஆதாரங்கள் இருக்கின்றனவா, அவை எங்கு இருக்கக் கூடும் என்பன போன்ற ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவேண்டும். முன்பே சிலர் செய்திருப்பாராயின், அது பற்றி எமக்குத் தற்சமயம் ஒன்றும் தெரியாதென்று தாழ்மையுடன்

கூறுகின்றோம். அப்படிச் செய்திருந்தால் மிகவும் நல்லதே, மேற்கொண்டு தொடரவேண்டும்.

குணங்களே பிரதானம் (நாணையம், குடியின்மை, கூத்தியின்மை), பூ போடுதல், வெள்ளைப் புடவை, தொள்ளைக்காது, மரகதப் பிள்ளையார், நான்கு 'வர்ண'ங்களில் அவர்களைச் சேர்க்க முடியாதது, இடங்கையார்–வலங்கையார் பிரிவில் இடமில்லாத நிலை முதலியவை பௌத்தசமயத்தை நினைவுபடுத்தி, அவை அச்சமயத்தின் எச்சங்களாமோ என்ற கருத்தை உண்டாக்குகிறது. விநாயகர் என்ற பெயர் இச்சுவடியில் வரவில்லையெனினும், அது புத்தரையும் குறிக்கும் என்பதும், 16ஆம் 17ஆம் நூற்றாண்டிலும் கூட சமணர் என்ற சொல் பௌத்தரைக் குறிப்பிடுவதாகவும் இருந்தது என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கன. இது உண்மையானால், பொதுவாகப் பலர் கூறிவருவது மாதிரி, 7ஆம் நூற்றாண்டில், அல்லது சுமார் 9–10 நூற்றாண்டுகளுக்கு முன்பு, பௌத்தசமயம் தமிழ்நாட்டில் முற்றிலும் மறைந்துவிடாமல், அதற்கு மாறாக, 17ஆம் 18ஆம் நூற்றாண்டு வரையிலும் பௌத்தர் இருந்தனர், பௌத்த சமயத் தாக்கங்கள் மறைமுகமாக இருந்து வருகின்றன என்பது தென்படுகின்றது. இது பற்றி விருப்பு வெறுப்பின்றி மேலும் ஆய்வு செய்யப்படவேண்டும்.

பிரான்சு நாட்டுத் தலைநகரைப்போலவே, ஐரோப்பாவிலுள்ள மற்ற பல தலைநகரங்கள், முக்கிய நகரங்கள், எழுதியவர் பிறந்த சிறு நகரங்கள் ஆகியவிடங்களில் வேறு சில சுவடிகள் கிடைக்கக்கூடும். முறைப்படி தேடினால் இத்தகைய வேறு சுவடிகள் பல இளைய வரலாற்றாய்வாளர்களுக்குத் தெரியவரலாம். அப்போது 1800–1850 ஆண்டுத் தமிழ், ஆங்கில, பிரஞ்சு, போர்த்துகீசு, டச்சு மற்றும் டேனிஷ் மொழிகளில் நாட்டுக்கோட்டையார் பற்றிச் சுவடிகள் கிடைக்கக்கூடும்.

1835ஆம் ஆண்டு வரை தமிழில் நூல்களை அச்சடிக்கவோ, பதிப்பிக்கவோ ஆங்கிலேயர் சுதந்திரம் கொடுத்திருக்கவில்லை என்றாலும், அக்காலத்தில் தமிழைக்கற்ற பல ஐரோப்பிய அறிஞர் இருந்தனர். அவர்கள் மூலமும் அவர்களுக்கு முன்பு வந்தப் பாதிரியார் மூலமும் 17ஆம் நூற்றாண்டு வாக்கிலிருந்தே வெளி உலகம் தென் இந்திய

மொழிகளைப் பற்றித் தெரிந்து, சிறிது சிறிதாக தமிழைப் பற்றியும் அறிந்துகொண்டு வந்தனர். ஆகவே, ஐரோப்பிய நாட்டு ஆவணக் காப்பகங்களில் நம் மொழி ஓலைச்சுவடிகளும் தாள்ச்சுவடிகளும் நிறைய இருக்கின்றன.

ஆங்கிலக் காலனிகளிலும் பிரஞ்சுக் காலனிகளிலும் அடிமைத்தனம் சட்டபூர்வமாக ஒழிந்த பிறகு உலகம் முழுவதும் ஏற்பட்ட ஆள் தேவைகளைப் பூர்த்திசெய்ய இந்தியர்களும் குறிப்பாகத் தமிழர்களும் வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். 19ஆம் நூற்றாண்டுக் கடைசியிலும் 20ஆம் ஆண்டு தொடக்கத்திலும் அந்தந்த நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி தொடங்கியபோது, அந்தக் காலகட்டத்தில் நாட்டுக்கோட்டைச்செட்டியார்களின் பங்களிப்புப் பற்றி ஏராளமான ஆய்வுக்கட்டுரைகளும் ஆய்வுநூல்களும் வெளிவந்துள்ளதை மேலே குறிப்பிட்டோம்.

ஆனால், அதற்கு முதல் அவர்கள் தமிழ்நாட்டைவிட்டுக் கிளம்பத் தொடங்கிய விபரங்கள் பற்றியும், அதற்கும் முன்பாக, 19ஆம் நூற்றாண்டின் முதற் பாதியில் அவர்கள் தமிழ்நாட்டில் எங்கு, எப்படி வாழ்ந்தார்கள் என்ற விபரங்கள் பற்றியும், சாதாரண நிலையில் இருந்த அவர்களுக்குப் பொருள் சேர்ந்த விதம் பற்றியும் அதற்கான ஆதாரங்கள் பற்றியும் ஆராய்ந்தால் தமிழ்ச்சமூகவியல் துறையில் புதிய தரவுகள் கிடைக்க வாய்ப்புண்டு.


பல முறைகள் திருத்தி மிகுந்த கவனத்துடன் பதிப்பித்திருக்கும் இந்நூலில் சில பிழைகள் விடுபட்டிருக்கக்கூடும். அவைகளைத் தயை கூர்ந்து பொருத்தருளுமாறு வாசகர்களை வேண்டுகின்றேன்.

அன்பன்,


மா.கோபாலகிஷ்ணன் (ஓர்சே, பிரான்ஸ்)
ggobal@yahoo.com


06–12–2006

செட்டிநாடு நாட்டுக்கோட்டை நகரத்தார் ஊர்கள்



நன்றி:
ஆத்தன்குடி நகரத்தார் மு.பு., 2001 (கொடுத்துதவியவர்: சு. ராசகோபால்)





Naf.8899 fo. 512 fac-simile

நாட்டுக்கோட்டையாரின் உற்பத்தியும் அவர்களின் சாதியும் முறையும் மைத்தும் விபரம்

நாட்டுக்கோட்டையார் யென்று அவர்களுக்குப் பேர் வந்ததுக்கு யியாதொரு முகாந்திரத்தையுங் காணோ மவர்க ளிருக்கிற பிறாந்தியங்களில் நாட்டுக்கோட்டை யென்கிற ஊருமில்லை அல்லது அப்பேருடைத்தான சாதி அல்லது தொழில் யென்கிலு மில்லை. ஆனா லவர்கள் வாசம் பண்ணுங் குப்பங்கள் மதுரை சமஸ்த்தானத்துக் குட்பட்ட நாடுகளுமா யந்த நாடுகளி லனேகங் குப்பங்களின் பேரின் கடசியில் கோட்டை யென்கிற சொல்லால் முடிவதினாலே[1] யிவடத்தி லிருக்கிறவர்கள் தங்கள் ஊருக்கு வெளியே யிருக்கிறவர்களை[2] நாட்டுப்பிறத்தார் யென்று சொல்லுவது போ லந்தப் பிறங்களுக்குப் பிறதான பட்டணமான மதுரையூரார் மேற்படியாரை நாட்டுப்பிறத்தா ரென்று சொல்லுகிறதற்கு வதிலாய்

---

1 தஞ்சை சுபா, ஆற்காட்டு சுபாவி லிருக்கிறவர்கள்.

2 தஞ்சை நகரத்துக்கு தென்மேற்கில் அனேகம் வூரின் பேர் கடைசியில் பட்டி யென்கிற சொல்லால் முடியுது: நாச்சியார்பட்டி, கரையாம்பட்டி, கோட்டிறபட்டி யென்று யிவ்விதமான பேருடைத்தான ஊர் அனேக மிருக்குது. அதுகளில் வாசம் பண்ணுகிறவர்களை பட்டிக்காட்டா ரென்று சொல்லுகிறார்கள். குப்ப மென்கிற பேரால் முடிகிற ஊரி லிருக்கிறவர்களை குப்பக்காட்டா ரென்று கூப்பிடுகிறார்கள். இவ்விதமாய் மதுரை, ராமுனாதபுரம் மிந்த மிந்த பெரிய ஸ்தலத்தி லிருக்கிறவர்கள் மேற்படி சாதியாரை தங்கள் நாட்டுக்குப் பிறம்பானவர்க ளென்று சொல்லுவது போல்க் கோட்டை யென்கிற பேருடைத்தான நாட்டி லிருக்கிறவர்க ளென்கிற அர்த்தமாய் நாட்டுக்கோட்டையா ரென்று ஞாய மத்தவிதமாய் முக்காலத்தில் கூப்பிட்டதுதா னிப்போ முகாந்திரமா யிருக்குது. அவர்கள் வாசம் பண்ணும் ஊரின் பேர் தேவர்கோட்டை, அரியகோட்டை, பட்டுகோட்டை, கண்டிர்கோட்டை.

நாட்டுக்கோட்டையா ரென்று முகாந்திர மில்லாமல் கூப்பிட்டது போலத் தோத்துது. யேனெண்டா லவர்களுக்கு அந்தப் பேர் வந்ததுக்கு முகாந்திரத்தை காணா மவர்களுக்குச் சொந்தமானதுமா யவர்கள் தங்களுடைய நாட்டுகளிலு மெழுத்து முதலாகிய சகல பேச்சுகளிலுந் தங்களை இளையாத்தங்குடியா ரென்று வழங்கிவருகிறது ஆகையால் அவர்களை இளையாத்தங்குடியா ரென்று கூப்பிடவேண்டியதே ஞாயமா மிருக்கின்றது.

அவர்கள் மதம் சிவ மதம். ஆனால் விட்டுணு மத மரிது, அப்படி மிருந்தபோதிலும் திருநீறு பூசுகிறதே யல்லாமல் திருமணி மிடுகிற தில்லை. அவர்களுக்குள்ளே தகப்பனானவன் தன் மகனுக்கு கலியாணம் பண்ண மனதிருந்த யெந்த வயதிலுஞ் செய்விக்கலாம். தகப்பனானவ[3] னல்லது அவனிடமா யாராவது தன் குமாரர்களுக்குக் கலியாணம் பண்ணவேணுமானால் பெண்ணிருக்கிற மிடத்துக்குப் போய் பெண் தகப்பனிடத்திற் பேசி சம்மதியான பிறகு மாப்பிளை வீட்டார்கள் தங்கள் வலுமைக்கித் தகுந்தபடி பதினொரு பொன்னுக் குறையாமல் தேவையான வரைக்கும் பெண்ணுக்குப் பரியங் கொடுக்கிறதாக நாலு பேர் முன்னுக்குப் பேசி கலியாண நாளை நிகிதப்படித்திக்கொண்டு வருவார்கள். கலியாணஞ் செய்ய யேழு நாளைக்கு மின்னே மாப்பிள்ளைமின் தகப்பனும் பெண்ணின் தகப்பனு மல்லது அந்த மிடமா மிருக்கிறவர்கள் யாராவது தங்களுடைய குருக்க ளிருக்கிற கோவிலில்ப் போய் இன்னார் குமாரனுக்கு இன்னார் குமாரத்தியை மின்ன நாளில் விவாக மென் றறிவித்து அந்தக் குருக்க ளிடத்திலெ நிட்செய தாம்பூலம் வைத்துவிட்டு வருவார்க ளதுக்குப்பிற கந்த விவாகம் நிறவேராம லிருக்கக்கூடாது. மாப்பிள்ளை யானவன் பெண்ணுக்குத் தன் கையாற் தாலி கட்டிகிற வழக்க மில்லாததினாலே கலியாணம் துவக்கிறதற்கு முன்னுதாக

3 மாப்பிள்ளை தகப்பனானவன் தன் குமாரனுக்கு பெண் தேடி கலியாணஞ் செய்து வைக்கிறதே யொழிய பெண்ணின் தகப்பனானவன் தன் குமாரத்திக்கு மாப்பிள்ளை தேடி செய்கிற தில்லை.

பெண்ணுக்குத் தாலி கட்டுகிறதற்காக தங்கள் சாதியில் தார மிழக்காதவனுமாய் பத்து பணத்துக்குச் செய்வா? முதலாளியுமாய் நாற்பது வயதுக்குக் குறையாதவனுமாய் பாரிச் சமுசாரியுமா யிருக்கிற ஒரு பெரிய மனுஷனை[4] நியமித்து, அவனை மாப்பிள்ளைக் கலியாணம் பண்ண மூன்று நாளைக்கி முன்னே வரவழைத்து தன் வீட்டில் முப்பழமுஞ் சாதமும் போட்டு வருவான். கலியாணம் பெண் வீட்டில் நடக்கிறதாகையால் தாலி கட்டுகிறதற்கு முதல் நாள் சாயரெட்சை யவடத்தில் கால் நடுகிறது. அந்தக் காலை நடும் பள்ளத்தில் முத்து, பவளம், பச்சரிசி, நெல்லு முதலான நவதானியங்களைப் போட்டு பால் தெளித்து பெரிய மனுஷாள் கையா லந்தக் காலுக்குச் சந்தண முதலான கெந்தங்ளைப் பூசி நடுகிறது. கலியாணத் தண்ணைக்கி மாங்கிளையையும் அரசங்கிளையையுங் கொண்டுவந்து மேற்சொல்லிய குழியில் நட்டும் மேற்சொல்லிய காலிலும் கட்டியும் வைப்பார்க ளதின் பேரில் பந்தல் போட்டு முடியும். அன்றையத் தினந்தானே மாப்பிள்ளையானவன் பெண்ணிருக்கிற வீட்டுக்கு யெதிரா யாகிலு மல்லது அருகாமையிலாகிலும் ஒரு வீடு சேகரித்து சாகை பண்ணுகிறது. அவர்களுக்குள் தாலி கட்டுகிறது றாக்காலத்தி லாகையால் விளக்கு வைத்த பிறகு அவர்கள் சாதியார் கூடுமான யாவரும் ஆண்பிள்ளைகள் மாப்பிள்ளை யிருக்கிற வீட்டிலும் பெண்பிள்ளைகள் பெண் ணிருக்கிற வீட்டிலேயுங் கூடி யிருப்பார்கள். தாலி கட்ட குரித்த நேரமான[5] உடனே மாப்பிள்ளையானவன் ஒரு பெட்டகத்திற் தாலியும் பெண்ணுக் கவன் கொடுக்கப்போற கோடி செகப்பு அல்லது மஞ்சல் பிடவையும் பழமுந் தேங்காயும் பாக்கு வெத்திலை, சந்தணம், பூ மிது முதலானதுகளையுந் தான் பரிசம் போடும் நகையையு மதில் வைத்து

4 அவனை அவர்கள் பெரியையா வென்று கூப்பிடுகிறார்கள்.

5 கலியாணம் பண்ணுவதுக்கு முன்னுதாக சோசியனை யழைத்து பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் பொருத்தமான நாளும் நட்ச்செத்திரமும் நாழியும் குறித்து வைத்திருக்கிறது.

தா னனுசரிக்கிற குருவினிடத்திற் கொடுக்கிறது. அந்த குருவானவன் மேற் சொல்லிய தாலி கட்ட நேமிக்கப்பட்ட பெரிய மனுஷனையும் உறவின் முறையாரையும் அழைத்துக்கொண்டு மாப்பிள்ளை தவிர மைத்த யாவரும் மேளதாளத்துடனே பெண்ணிருக்கும் வீட்டுக்குப் போய் கலியாணப் பந்தலி லுள்க்கார்ந்து மேற்படி குருவாகிய பிராமணனானவன் யெக்கியம் வளத்தி பொன்னால் செய்திருக்கிற மேற்படி தாலியை கைமி லேந்திக்கொண்டும் வாழ்த்துதலான சில கிறந்தச் சுலோகங்களை சொல்லிக்கொண்டும் உட்காந்திருக்கிற சபையார் யெல்லாரு மந்தத் தாலியைத் தொடும்படியாய் செய்த பிறகு தாலி கட்ட நேமித்திருக்கும் பெரிய மனுஷன் கையில் சபையோ ரறிய குடுக்க அதை யவர் வாங்கிக்கொண்டு பெண்ணிருக்கிற அறைமில் போ யந்தப் பெண்ணின் கழுத்திற் கட்டுகிற மாதிரியாய்த் தாலியை பெண்ணின் கழுத்தின் பேரில் கொண்டுபோக பின்னா லிருக்கிற பெண்ணின் நாத்தியாவது மாமியாவது அல்லது அவர்களிடமா மிருக்கிற யாராவது அந்தத் தாலியை யந்தப் பெண்ணின் கழுத்தில் முடிந்துவிடுகிறது. அந்த சமையத்தில் பெண்ணின் வலது பக்கத்தி லிரண்டு குத்து விளக்கு கொளுத்தி ஒண்ணோடொண்ணு சோடாய் சேர்ந்திருக்கும்படியாய் நெரிக்கிவைக்கிறது. அது ஆணும் பெண்ணுஞ் சேர்ந்திருக்கு தென்கிற அற்தமாம். அவடத்தி லிருந்து மேற்படி பெரிய மனுஷன் சபையா ரிருக்கிற கலியாணப் பந்தலில் திரும்பிவந்த உடனே யவடத்தில் யெல்லார் மின்னிலைக்கி கலியாணத்துக்குச் சொந்தக்காறர்களா மிருக்கிற மிரு தரத்தாருடைய தகப்பன்மார்கள் அல்லது அவர்க ளிடமா மிருக்கிற யாராவது ஒருவருக்கொருவர் யெழுதிக் கொடுக்கிற பாவினையாக கலியாண ஆதரவு யெழுதி மாப்பிள்ளை போடுகிற பரியமும் பெண் வீட்டுக்காறர் கொடுக்கிற சீரும் வகை விபரமா யெழுதி யவரவ ரொவ்வொரு ஆதரவைக் கட்டிக்கொள்ளுகிறது. பின்பு பெண் வீட்டில் மாப்பிள்ளை தவிர

மைத்த யாவரும் சுத்த போசனமாய்[6] சாப்பிடுவார்கள். மைத்தா நாள் பட்டப்பகலில் மாப்பிள்ளை மாத்திரங் குதிரை யேறிக்கொண்டு ஊர்கோலம் வருகிறபோது அந்த ஊரி லிருக்கிற தங்கள் சாதியாரின் ஒவ்வொரு வீட்டுத் தெருவாசல்ப்படியில் நிற்க அந்தந்த வீட்டி லிருந்து கரைத்த மஞ்சல் தண்ணீரை வெங்கலச் சட்டியிற் கொண்டுவந்து அதை மாப்பிள்ளையோடு கூட வந்திருக்கும் ஊர்ப் பண்டாரம் வாங்கி அம்மாப்பிள்ளைக்கி ஆலாத்தி யெடுத்து கீழே மாப்பிள்ளையின் காலடியிலே ஊத்திப்போடுவா னிப்படியே வீடுவீடாய் போய் ஊருகோலம் வரும்போது பெண்வீட்டுக்கு மந்தப்படியே ஊர்கோலத்தோடே வாசப்படிக்கி யெதிராய் வந்து நிற்பான். மாப்பிள்ளையினுடைய அத்தையானவ ளல்லது அவளிடமா யிருக்கிற யாராவது கலியாணம் பண்ணின பெண் செறுசு அல்லது பெரிசா யிருந்தாலு மந்தப் பெண்ணை கையா லணைத்துத் தூக்கி வந்திருக்கிற மாப்பிள்ளைப் பார்க்கும்படியாய் வாசப்படிக்குள் ளிருந்து காட்டுவா ளவடத்தில் மேற்சொல்லியபடி ஆலாத்திச் சடங்கும் நடக்கும். மாப்பிள்ளையானவன் தன் பெண்சாதியைப் பாத்த பிறகு மின்னம் ஊர்கோலஞ் செய்யவேண்டிய மிடங்களை சுத்தி முடித்துக்கொண்டு பெண்வீட்டுக்குத் திரும்பிவந்து உள்ளே போவான். அப்போது பெண்வீட்டில் கலியாணப் பந்தலில் போட்டிருக்கிற மணையில் மாப்பிள்ளையும் பெண்ணும் உள்க்காரவைத்து அவர்களுக்கு மின்னாலே ஒரு வெங்கலச் சட்டியில் தண்ணீர் விட்டு அதில் புஷ்பங்களை போட்டிருக்கும். குருவானவனும் வந்திருக்கிற பிறசைகளும் வொவ்வொருவராய் மேற்படி புஷ்பங்களை யெடுத்து வித்தியாசமில்லாமல் மாப்பிள்ளையினுடையவும் பெண்ணினுடையவும் முழங்காலிலும் முழங்கையிலும் தோளிலும் உச்சந்தலையிலும் வைத்து பின் பக்கத்தில் போட்டுவிடுகிறது. இவ்விதமா யெல்லோரும் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் செய்வார்கள். மறுபடி மாப்பிள்ளைக்

6 மாமிசம் மீன் முதலாகிய கவிச்சிப் பண்டங்கள் நீங்கலாய் மறக்கறி சாதமுந்தான் சுத்த போசனம்.

கடுத்தாப்போல் பக்கத்திலும் பெண்ணுக்குப் பக்கத்திலும் அவர்களுக்கு மாமன் முறையானவர்கள் உட்காந்து முதல் பெண் பக்கத்தி லிருக்கிற மாமனானவன் முக்தாவி லிருக்கிற பச்சரிசியை பெண்ணின் கையில் நிறையக் குடுத்து அதின் பேரில் தேங்காய் வைத்து தன்னால் கூடிய ஒரு துகை 5 அல்லது 7 பணத்தையும் வைத்து மேற்படி பெண்ணின் கையை தன் கையால் பிடித்து பக்கத்தி லிருக்கிற மாப்பிள்ளைக்கு நேரா மிழுத்து அதின் கீழே மாப்பிள்ளையின் வெறுங்கை ரெண்டையும் அவனுக் கடுத்தாப்போ லிருக்கிற அவன் மாமன் சேர்த்து பிடிக்க அப்போது பெண்ணானது தன் கைமி லிருக்கிற தெல்லாம் மாப்பிள்ளை கையில் விழும்படியாய் விட்டுவிடும் அல்லது விட்டுவிடச் செய்கிறது. அப்படியே தன் கையில் விழுந்த அரிசி, தேங்காய், பணம் முதலானதுகளை தனக்கு முன்னாலே யிருக்கிற குருவானவனுக்கு குடுத்துவிடுவான். இப்படியே பெண்ணானது மூணு தரம் செய்யும். அப்படியே மாப்பிள்ளை மூணு தரஞ் செய்ய பெண்ணானது தன் கையில் விழுகிறதையும் குருக்களுக்கு குடுத்துவிடும். பிறகு பெண்ணானது அவடத்தில் தானே மாப்பிள்ளைக்கு சாப்பாடு போடுகிற சடங்கு செய்விப்பார்கள். அதர்க்குப் பேர் பூதகலச சடங் கென்று சொல்லுவார்கள். பிறகு பெண்ணு மாப்பிள்ளையும் கைகோத்துக்கொள்ளுவார்கள் அல்லது கைகோத்துக்கொள்ளச் செய்து அவட மிருந்து பட்டம்பகலில் தானே படுக்கை அறைக்குக் கூட்டிக்கொண்டு போவார்கள். அவடத்தில் பால் பழங் குடிக்கக் குடுப்பார்கள். அண்ணைய ராத்திரி பெண் சிறுசா யிருந்தபோதைக்கும் பெண்ணு மாப்பிளையும் படுக்க வைப்பார்கள். அவர்களோடு கூட அவர்கள் மாமிமார்களும் தாய்மாமன்மார்களும் கலந்து அவடத்தில் படுத்துக்கொள்ளுவார்கள். அதுதான் பலதானம் செய்கிற துவக்கம். பெரிய பெண்ணா யிருந்தான் மாத்திரம் சடங்குபடி நிறவேறும். சிறுதா யிருந்தால் அந்த மாதிரி சடங்கு மாத்திரம் நடத்துகிற முறமையே யொழிய மைத்தபடி அந்தப் பக்குவ காலம் வரைக்கும் காத்திருக்கவேணும். இன்னமுங்

கலியாணம் முடியவில்லை. அவர்களுக்குள்ளே 7 நாளையக் கலியாண மாகையால் மேற்படி சொல்லிய சடங்குகள் முடிந்த பிறகு மைத்த நாள்களில் உறமுறையாருக்கு சாப்பாடு போடுகிறதே முக்கியம். உள்ளூரி லிருக்கிற அவர்கள் சாதியார் கலியாணம் பண்ணின வீட்டில் 7 வேளை சாப்பிடவேண்டியது அகத்தியம். அப்படி கூடாவிட்டால் முன்னுதாக தங்களுக்கு யிருக்கிற தகுமான விக்கினத்தை சொல்லியனுப்பி மன்னிப்பைப் பெத்துக்கொள்ளவேணும். அப்படியே அவர்களுக்குள்ளே யிருக்கிற வண்ணான்குடிப் பிள்ளைக்கு யேழு வேளை சாப்பாடு போடவேண்டிய தாகையால் ஒவ்வொரு வேளைக்கு ஒரு மரக்கால் அரிசியாக காய்கறி பலசமபாரமும் ஒவ்வொருவனுக்குங் குடுக்கவேணும் அல்லது அந்த துகைக்கு தகுந்தாப்போலே சாதமுஞ் சமைத்த கறியும் குடுக்கப்படும். அவர்களுக்கு ஒவ்வொருவனுக்கும் மூணு பணத்துக்குக் குறையாமல் குடுப்பார்கள். அவர்கள் கலியாணத்துக்கு தகினகுரு வென்றழைக்கும் பிறாமணனுக்கு அந்த கலியாணத்தில் வரும் வருமானத்தை[7] யன்றி வேறே தஸ்தூரி(?) கலியாணம் ஒண்ணுக்கு 7 பணத்துக்கு குறையாமல் குடுக்கவேண்டியது. இந்த யேழு நாளைக்குப் பிறகு மாப்பிள்ளையும் பெண்ணும் மாப்பிள்ளை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போவார்கள். அவடத்தில் அவர்கள் உறமுறையார்களும் வந்து யிருந்து தாம்பூலம் வாங்கிக்கொண்டு போவார்கள். சிலர் யிருந்து மாப்பிள்ளை வீட்டில் சாப்பிட்டுப் போவார்கள். பெண் வீட்டில் போட்டிருக்கிற கலியாணப் பந்தல் முப்பதாம் நாள் பிரிக்கப்படும். இந்த முப்பது நாளைக்குள்ளே வெளிஊரி லிருந்து வருகிற தங்கள் உறமுறையாரை கலியாணத்தின்போது வந்தவர்களை அழைக்கிறதுபோல் மரியாதை செய்து அவர்களை யழைத்து சாப்பாடு முதலானது போடுவார்கள். கலியாணத்தின் முதலஞ்சு நாளையச்

7 கலியாணத்தில் யெக்கிய முதலாகிய மைத்த சடங்கு செய்யும்போது பழம், தேங்காய், அரிசி, நெய், வெல்லம், தெட்சணை இது முதலானதுதான் வருமானம்.

சிலவு பெண்வீட்டினுடையது. மைத்த ரெண்டு நாளையச் சிலவு மாப்பிள்ளை வீட்டார் சிலவு. கலியாணத்தில் தாலி கட்டுகிற முதல் நாள் தவிர மைத்த நாட்களில் கொழுத்த கிடா யடித்து சாப்பிடுகிறது அவர்களுக்குள்ளே யது முக்கியமான காரியம். அதின் தோலை முதர்க்கொண்டு விடாமல் பொசிக்கித் திங்கிற சாதி யென்று சுலோபமாய் சொல்லுகிறார்கள்.

கலியாணம் பண்ணின முதற் தடவை வருகிற காற்திகை பொங்கலில் அரிசி, பருப்பு, தேங்காய், பழம், வெல்லம், மஞ்சல், யெள், பிடவை, சோம னிது முதலானதுகளை மாப்பிள்ளை வீட்டுக்குக் கொண்டுபோ யவர்களுங் கூட மிருந்து அண்ணையத் தினம் மாப்பிள்ளை வீட்டிற் போசனஞ் செய்வார்கள். பெண்ணானவள் தலச்சன் பிள்ளை யுண்டான ஆறா மாதத்தி லவள் தாய் வீட்டார்கள் சூல் வரிசை யெண்டு சொல்லுஞ் சில பலகாரங்களைக் கொண்டுபோய் மாப்பிள்ளை வீட்டில் யெல்லாருங் கூடி மிருந்து சாப்பிடுகிறது. இந்தச் சடங்கு நிறவேறின பின் பெண்வீட்டுக்காறர்கள் தங்கள் வீட்டுக்குப் போய்விடுவார்கள். ஆனால் ஏழா மாதமாகும் போது பெண்வீட்டுக்காறர் வந்து பெண்ணைத் தங்கள் வீட்டி லழைத்துக்கொண்டுபோ யந்தப் பிள்ளைப்பேறின் சிலவை தங்களுதாய்ச் செய்வார்கள். பிள்ளை பிறந்த ஒன்பதாம் நாள் அறை கழித்த பின்பு நல்ல நாள் பார்த்து புருஷன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போன ஒரு வருஷத்துக்குள்ளே பிள்ளைக்கித் தலைமுடி யெறக்கிற சடங்கை தகப்பன் வீட்டில் தங்கள் சிலவில் செய்வார்கள். அப்போது பெண்வீட்டுக்காரர்கள் புள்ளைக்கி காப்பு, காரை முதலாகிய நகைகளும் பாலாடை முதற்கொண்டு அரிசி காய்கறியும் இது முதலானதுகளை வரிசையாக கொணர்ந்து இப்படிப்பட்ட சடங்குகளுக்கு உறவின்முறையாரு மிருப்பார்கள். இந்தச் சடங்குகள் ஆண்குழந்தை யல்லது பெண்குழந்தை யானாலுஞ் சரியே. பிள்ளையைப் பெத்தவன் ஆஸ்திபந்தனாக மிருந்தால் தலைமுடி யெடுக்கிற சடங்கு நடக்கிற அண்ணையத் தினம் கோவிலுக்கு காணிக்கையும் பிட்சைக்காறருக்கு

சாப்பாடும் தானதற்மமும் செய்வான். இந்த சடங்குக்குப் பிறகு பிள்ளைக்கு மூணு வயசு ஆகிறதற்கு முன்னே காது குத்துகிற சடங்கு செய்கிறது. அது பிள்ளையின் தகப்பன் சிலவு. பெண்ணைக் கலியாணம் பண்ணிக் குடுத்தவன் ஆஸ்திபந்தனா யிருந்தால் காற்த்திகை பொங்க லிந்த தினங்களில் தன் பெண் புருஷன் வீட்டில் வாழுகிற வரையில் யெந்த காலமும் தப்பாமல் வரிசை குடுத்துவருவான். அது கட்டாயஞ் செய்யவேணு மென்கிற முறமை யில்லை.

தார மிழந்தவன் மரு கலியாணஞ் செய்துக்கொள்ளும் போது முதற் கலியாணத்தில் செய்த சடங்கைப் போல்தான் நடக்கும். ஆனா லவ்வளவு அதிக சிலவு செய்து அதிப்பிறபலியமாய் கலியாணஞ் செய்யாமல் கொஞ்சஞ் சுலுவாய் செய்துக்கொள்வான். ஆனால் மறு கலியாணத்திற் பரிய மாத்திரம் ரெட்டித் திருக்கும். தார மிருக்க மறு கலியாணஞ் செய்துக்கொள்ள வேணுமானால் முதற் பெண்சாதியின் உத்திரவின் பேரிலு மிரண்டாவது அதற்குத் தகுமான முகாந்திரமு[8] மூன்றாவது உறவின்முறையாருடைய சம்மதியின் பேரிலு மாத்திரஞ் செய்துக் கொள்ளலாம்.

பெண்ணானவள் யிளந்தையில் தானே விதவையாய்ப் போனால் யெந்த முகாந்திரத்தைக் கொண்டாவது மறுபடி கலியாணம் பரிச்சேதஞ் செய்துக்கொள்ளக் கூடாது. தான் விதவையாய்ப் போன நாள் முத லவள் மறண பரியந்தம் மஞ்சல் பூ முதலிய கெந்தங்களை யணிந்துக்கொள்ளவே கூடாது.

கலியாணம் பண்ணின அல்லது கலியாணம் பண்ணாத பெண்ணா யிருந்தாலும் றுதுவானால் வீட்டுக்கு வெளியே அருகாமையில் தனியா யொரு குச்சு வீடு கட்டி அந்த

8 பிள்ளை பெறாமல் மலடாயிருந்தாலும் அல்லது பெண் ரூபத்துக்கு குறையா யிருந்தாலும் அல்லது பயித்தியம் யிப்பேர்ப்பட்ட முகாந்திர மிருக்கவேணும்.

குச்சுவீட்டுக்குள்ளே முப்பது நா ளந்தப் பெண் ணிருக்கும். இந்த முப்பது நாளு மந்த வீட்டில் ஊர் பெண்கள் வந்து மஞ்சல், பூ முதலிய கெந்த வாசங்களை யணியப்பண்ணி பலகார முதலிய சாப்பாடுகளை சாப்பிடுவார்கள். ஒன்பதா நாள், பெண்ணுக்கு தலை முழுக்காட்டி[9] மறுபடியு முன்னிருந்த யிடத்தில்தானே வைப்பார்கள். பிறகு முப்பதாம் நாள் பலகாரங்களையும் நவதானியங்களையுந் தனித்தனியாய் யொரு தட்டில் வைத்து பெண் தலையை சுத்தி திஷ்ட்டி கழித்து அதுகளை வண்ணானுக்குக் கொடுப்பார்கள். கொஞ்சம் ஆஸ்திபந்தனா மிருந்தால் தினந்தோறும் மேற்சொல்லியபடி திஷ்ட்டி கழித்து வண்ணானுக்கு கொடுத்து வருவார்கள். இந்தச் சிலவு பெண்வீட்டுக்காரர்களுத்தா மிருக்கும்.

யேழு வயசுக்கு குறைந்த பிள்ளை ஆண் அல்லது பெண் மிறந்து போனால் ஒரு யேணையில் போட்டு சங்கூதிக்கொண்டு யெடுத்துப் போய் சுடலைக் கரையில் புதைத்துப் போடுகிறது. அண்ணையத் தினம் ஊர் பண்டாரம் முதலானவர்களுக்கு சாப்பாடு போட்டு ரெண்டு பணத்துக்குக் குறையாம லவனுக்கு குடுத்து அண்ணையத் தினந் தானெ துக்கங் கழித்துப் போடுறது.

கலியாணம் பண்ணாத வாலிப னிறந்தால் அவனை கழுவி குளிப்பாட்டின பிறகு ஊர் பண்டாரம் வந்து இறந்துபோனவ னுடைய துக்கத்துக்குச் சொந்தக்காறனை கிட்டே வைத்துக்கொண்டு யெக்கிய முதலான மைத்த சடங்குகளைச் செய்து பிறகு சவத்தை ஒரு ஆசந்தியில் யெடுத்துக்கொண்டு போய் சுடலையில் தகனித்துப் போடுகிற முன்னுக்கு தகப்பன் அல்லது சகோதிரன் கொள்ளி வைக்கிறது. மைக்கா நாள் காலமே துக்கத்துக்குச் சொந்தக்காரனும் மைத்த உறவினமுறையாரும் சங்கூதிக்கொண்டு சுடலைக்கரைக்கிப்

9 தலைமுழுக்குச் சடங்கின் போது வந்திருக்கிற பெண்கள் அவடத்தில் கும்மியடிப்பார்கள். அன்றியும் வந்திருக்கிற பெண்களுக்கு அந்திசந்திச் சத்தேறக்குரைய தினகாலமும் கும்மியும் பெட்டகமு மடிக்கிறதே முக்கியமா மிருக்கும்.

போய் துக்கத்துக்குச் சொந்தக்காரன் அஸ்தியை[10] யெடுத்து ஆத்தில் அல்லது குளைத்தில் கரைத்துவிட்டு வந்துவிடுகிறது. இந்த இரண்டு நாளையச் சடங்குகளைச் செய்துஊர் பண்டாரத்துக்கு யேழு பணத்துக்கு குறையாமல் கொடுப்பார்கள். 16ஆம் நாள் கறமாதி செய்கிறது (கறமாதிச் சடங்கு செய்கிற விபரம் அடுத்த யேட்டி னடியில் விளங்கும்).

கலியாணம் பண்ணாத பெரிய பெண் ணிறந்துபோனா லதை குளிப்பாட்டி மஞ்சல் முதலான கெந்தகங்களையும் பூசி புஷ்ப்ப முடித்து ஆடம்பரமாய் பூ ஆசந்தியில் வைத்து சுடலைக்குக் கொண்டுபோய் தகனித்துப்போட்டு மைக்காம் நாள் பால் தெளிக்கிற சடங்கைச் செய்து 16ஆம் நாள் கறமாதி செய்து போடுகிறது. புருஷ நிருக்கக் கலியாணம் பண்ணின பெண் ணிறந்துபோனால் மேற்சொல்லிய கலியாணஞ் செய்யாத பெண்ணுக்கு செய்த மாதிரி தான் செய்கிறது. ஆனால் அவள் புருஷ னண்ணையத் தினம் சறவாங்க ஷவரம் பண்ணி க்கொண்டு துக்கத்துக்குச் சொந்தக்காரனா யிருப்பான். 16ஆம் நாள் அவன் கறமாதிச் சடங்கு செய்துக் கொள்ளுவான். கைம்பெண்சாதி யிறந்துபோனால் பூ, சந்தண முதலான கெந்தங்கள் பூசாமல் யிறந்த சவத்தை ஒரு ஆசந்தியில் கொண்டுபோய் தகனித்துப்போட்டு மேற்சொல்லிய சடங்குகளை செய்விக்கிறது.

10 ரெம்ப யிளந்தையான பெண் அல்லது பிள்ளை யிறந்து போனால் அஸ்தியை யெடுத்து பால் தெளிக்கிற சடங்கு செய்கிறது. அவ்வளவு முக்கியமாய்ச் செய்யாத போதிலும் பெரியவர்களுக்குக் கட்டாயம் செய்யவேண்டியது. அப்படி செய்யவேண்டி யிருக்கிறபோது துக்கத்துக்குச் சொந்தக்காரன் உறவின் முறையாருடனும் ஊர் பண்டாரத்துடனும் சுடலைக்குப் போய் வெந்து தணிந்திருக்கிற கட்டையைப் பிறித்து உள்ளே வெந்து யிருக்கிற அஸ்தியை மகா பூச்சிதமாய் சேர்த்து ஒரு பச்சைத் தோண்டியில் சத்தப்படாமல்ப் போட்டு, பால், தேன் வார்த்து புஷ்பங்களையும் போட்டு, அந்தத் தோண்டியை ஒரு ஆத்தில் அல்லது குளத்தில்ப் போட்டுவிட்டுப் போனவர்க ளெல்லாரும் குளிச்சு முழுகிவிட்டு திரும்பி வந்துவிடுகிறது. அந்தச் சடங்கின்போ தவர்கள் ஊர் பண்டார மிருந்து சடங்கை நிறவேத்துகிறது.

துக்கத்துக்குச் சொந்தக்காரன் மகன் அல்லது அவனிடமா யாராவது யிருந்து நிறவேத்தி வைக்கிறது.

பெண்சாதி யிருக்க புருஷ னிறந்துபோனால் யிறந்துபோனவன் பெண்சாதிக்கு அண்ணயத் தினம் சகல உடுபாவினையும் ஆபரணமும் போட்டு மைத்த கெந்த வர்கங்களையும் அணிந்து கடசி விசையாக மஞ்சல் குளுப்பாட்டி அவளை சிங்காரித்து யிருக்கும். யிறந்துபோன சவத்தை முன்னாலே சொல்லி யிருக்கிறபடி சுடலையில் கொண்டுபோய் தகனித்து மறு நாள் பால் தெளிக்கிற சடங்கும் செய்து 16ஆம் நாள் கறமாதி செய்யப்படும்[11].

புருஷன் செத்த 11(ஆம்) நாள் பெண்சாதியின் தாலியை வாங்கிறது. குழந்தைக ளிருந்தால் தன் புருஷன் வீட்டில்தானெ யிருக்குறது. சுத்தமாய் புள்ளை யில்லாம லிருந்தால் அவளுக்கு 30 பொன்னுக்கு குறையாமல் கைம்பெண் கூறு கொடுத்து தாய் வீட்டுக்கு 21ஆம் நா ளனுப்பிவிடுகிறது. தார மிழந்தவ னிறந்துபோனால் அவனையும் மேற்சொல்லிய சுடலையில் தகனித்துப்போட்டு பால்தெளிச் சடங்கும் கறமாதிச் சடங்கு முக்கியமாய்

11 கொள்ளி வைக்கிறவர்கள் கற்மாதிச் சடங்கை செய்கிறது. அப்படி கற்மாதிச் சடங்கு செய்ய சொந்தக்காரன் மேற்படி சடங்கு செய்ய 16ஆம் நாளைக்கு முன்னுதாக ஊரி லிருக்கிற தங்கள் சாதி பெரிய மனுஷாளிடத்தி லவ னறிவிக்கிறது. அவர்கள் இவ னஸ்த்தியை யறிந்து ஒரு ஓலை யெழுதி யிவர்கள் கையொப்பம் வைத்து, அவன் கையில் குடுத்து தங்கள் குருக்க ளிருக்கிற ஊருக்கு அனுப்புவார்கள். அப்படியே யிவன் கொண்டு போன ஓலையை மேற்படி குருவானவர் பார்த்து அதில் கண்டிருக்கிறபடி அதிக சிலவு அவனுக்கு வருத்தாமல் கறமாதி சடங்கை நிறவேத்தி யனுப்பிவைப்பார். கறமாதிச் சடங்கு செய்கிற விபர மெப்படி யென்றால் சடங்குக்குச் சொந்தக்காரனும் குருவானவனும் குளித்து முழுகிப்போட்டு ஒரு யிடத்தி லுள்கார்ந்து குருவானவ னவனுக்கு முன்பாக யெக்கியம் வளத்தி கும்பம் வைத்து யாகசாலை திறந்து மேற்படி துக்கத்துக்குச் சொந்தக்காரனுக்கு பூணல் போட்டு மந்திரஞ் சொல்லி சடங்கை முடித்து மேற்படியானுக்கு சாப்பாடு போட்டு அனுப்பிவைப்பான்.

நடக்கும். இந்தச் சடங்குகள் செய்ய அவன் பெத்த பிள்ளை அல்லது அது யிடமா யிருக்கிற யாராவது துக்கத்தை நிறவேத்தி வைப்பார்கள்.

தங்களுக்குள்ளே யிறந்தவர்கள் தாங்கள்தானே தூக்கிக்கொண்டு போறது. யிறந்தவர்களை பொதுப்படச் சுட்டுப்போடுகிறது. ஆனால் அம்மையிலும் பேதியிலும் யிறந்தவர்களையும் யின்னமுஞ் சிறுபிள்ளைகளையும் சுடலையில் சுட்டுப்போடாமல் புதைத்துவிடுகிறது. இறந்தவர்களைக் குறித்து வருஷாவருஷம் தெவஷம் கொடுக்குறது முண்டு.

தகப்ப னுயிரோடிருக்கிற வரையில் பிள்ளைக்கு வீட்டில் யாதொரு அதிகாரமு மில்லை. ஆனா லவனுக்குப் பிற்காலம் பிள்ளையானவன் ஆதனத்தை ஒப்புக்கொள்ளுவான் அல்லது பிள்ளையானவன் யிளந்தையா யிருந்தால் தாயின் செல்வாக்குள்ளே யிருந்து நடக்கவேணும். ஆனால் 16 வயதுக்கு குறைந்த பிள்ளையானவன் யாதொரு தஸ்தாவேசில் கையொப்பம் வைக்ககூடாது. ஆகிலும் அவர்களுக்குள்ளே முறமை யில்லாததினாலே ஆதனத்தை நடப்பிக்கவாவது அல்லது யாதொரு மைத்த காரியம் செய்யவேணுமானாலும் தங்கள் சாதி பெரிய மனுஷாள் பண்ணிகீற திமானத்தின் பேரில் செய்யவேணும். இன்னமும் பிள்ளையானவன் ரொம்ப யிளந்தையா யிருந்து தாய்தகப்ப னில்லாதவனா யிருந்தால் தகப்ப னாஸ்தியை ஊரி லிருக்கிற பெரிய மனுஷாள் அவனுக்கு தகுந்த பிறாய மாகிறவரைக்கும் காப்பாத்தி வைத்திருந்து தங்க ளிடத்தில் அந்த ஆஸ்தி யிருந்தவரைக்கும் வட்டியு முதலுமாக கூட்டி அவன் கையில் குடுப்பார்கள். தகப்ப னாஸ்தி தனது குமாரனுக்கு சொந்தம். யெத்தனை பிள்ளை யிருந்தாலும் சரிபங்காய்க் குடுக்கிறது. முதல் தாரத்தின் ரெண்டாந் தாரத்துக்கும் அனேக பிள்ளைக ளிருந்தால் ஆஸ்தியை தாரத்தின் பேரில் வீதித்து பிள்ளைகள் பங்கு பிறித்துக்கொள்ளுவார்கள். பிள்ளைக ளில்லாத காலத்தில் பெண்சாதி புருஷ னாஸ்திக்குப் பாத்தியமுள்ளவ

ளாவாள். தாயாதி பங்காளிகள் யொருமிக்க மிருந்து ஆஸ்தியைப் பிரித்துக் கொள்ளவேணுமானால் பங்காளிக்கொத்த பங்கு தன் சகோதரன், தன் சகோதரன் பிள்ளைகளுக்கு குடுத்து வருகிறார்கள். அவர்களுக்குள்ளே யெப்பேர்ப்பட்ட வியாச்சிய முண்டா மிருந்தபோதைக்கும் அந்த வியாச்சியத்தை தங்கள் நகரி லுள்ள பெரிய மனுஷாள் தீர்த்துவிடுகிறபடி சம்மதிப்பட்டுப் போறது. ஆனால் அவர்கள் செய்கிற தீர்மானம் நாளது வரையில் பாரபட்ச மில்லாத தாகையால் வியாச்சியக்காறர் தங்கள் வியாச்சியத்தை வெள்ளைக்காரர் ஞாய ஸ்தலத்தில் வந்து வியாச்சிய மாகுகிறதில்லை. வியாச்சியப்பட்டிருக்கிறவர்களில் ஒரு வகையராவின் வியாச்சிய நிமித்தம் ரெண்டு அல்லது மூனு பேர் மேற்படி வியாச்சிய முடிகிறவரையில் வேலை செய்யாமல் மெனக்கெட்டிருந்தால் மைத் தொரு வகையராவும் தன் னெதிரியோடு யெவ்வளவு பேர் மெனக்கெட்டு வேலை செய்யா திருக்குராா்களோ அவ்வளவு பேர் இவன் தன் மனுஷர்களை வேலை யா தொன்றும் செய்யாமல் மெனக்கெடச் செய்யவேணும். அப்படி அவனுக்கு அவ்வளவு சன மில்லாத போனால் குறைச்சலா யிருக்கிற அவ்வளவு பேருக்கு தகுந்த மனுஷர்களை வேறெ சேகரம் பண்ணி வியாச்சிய முடிகிற வரையில் கூலி குடுத்து வேலை செய்யாமல் மெனக்கெட்டிருக்க செய்யவேணும். இது அவர்கள் கட்டுப்பாடு. அவர்கள் பிரதேசத்தி லிருக்கு மிடத்தி லவர்களுக்குள்ளே வியாச்சியம் வந்தால் அந்த மிடங்களி லிருக்கிற தங்கள் சாதியாரைக் கூட்டி ஞாயத்தை பெத்துக்கொள்ளுகிறது. சில விசை அது சரிப்படா திருந்தால் தங்கள் ஊருக்குப் போய் அவடத்தி லிருக்கிற தங்கள் சாதி பெரிய மனுஷாளிடத்தில் வியாச்சியத்தைத் தீர்த்துக்கொள்ளுகிறது. அவர்கள் செய்கிற தீர்மானத்துக்கு விரோதமாய் நடக்கக்கூடாது. தங்கள் வியாச்சிய முடிகிற வரையில் யாதொரு தொழிலும் செய்யப்படாது. அவர்களுக்கும் மறு சாதியானுக்கும் யாதொரு குடுக்கல் வாங்கல் வியாச்சியம் நேரிட்டால் கூடுமான வரையில் சமாதானத்தில் தீர்த்துக் கொள்ளப் பிறையாசப்படுவான். அப்படி

முடியாத காலத்தில் வெள்ளைக்காரர் ஞாயத்தில் பிறவேசித்து நாயம் பெற்றுக்கொள்ளுவார்கள். தங்களுக்குள்ளே உண்டான வியாச்சியத்தை தங்கள் சாதிக்குள்ளே தானே தீர்த்துக்கொள்ளவேணு மென்கிற கட்டுப்பாடு[12] அவர்களுக்குள்ளே முக்கியம்.

அவர்க ளிப்போது வாசம் பண்ணிவரு மிடத்திள(?)னே வகையாவது: கோத் கொறொமாந்தால் (French: Côte Coromandel = English Coromandel Coast) யென்ற பிறாந்தியத்தி லுள்பட்ட மதுரை சமஸ்தானத்தில் மதுரைக்கு வடகிழக்கு, வைகையாத்துக்கு வடக்கு, வெள்ளாத்துக்குத் தெர்கு, யிந்த நடுமத்தியில் அவர்கள் வாசம் பண்ணும் குப்பங்களின் துகை 96. அதில் அவர்க ளிருக்கிற பிறதானமான யிடத்துக்குப் பேர் தேவர்கோட்டை. அந்த 96 குப்பங்களும் 4 காத சவுக்கத்துக்குள்ளே யடங்கியிருக்குது. அந்த நாடு மழை பெய்ந்தால் மாத்திரம் விளைவுண்டு. முக்கியமாய் அவடங்களில் பருத்தி யின்னமு மைத்த புஞ்சை தானியங்களும் விளையும். நஞ்சை மெத்த கொஞ்சம். யிப்போது சில காலமாய்

12 மதுரையில் பீத்தர் துரை கலக்கட்டேரா யிருந்தபோது மேற்படி சாதியார் வெகு கட்டுப்பாடா யிருக்குறார்க ளென் றறிந்து அதை கொலைத்துப் போடுகிறதற்காக அந்த சாதியாருக்கு தலமையான ஊராகிய தேவர்கோட்டைக்குள்ளே அடிதடி வியாச்சியந் தீர்க்க ஒரு டாணா வைக்க யேர்ப்பட்டான். அதர்க் கந்த சாதியார் வைக்கக்கூடா தென்று ரொம்ப தகரார் செய்தது மன்றி தங்கள் ஸ்திரிகள் மார்மேல் துணி போடாததாகையால் அப்பேர்ப்பட்ட ஊரில் பிறச் சாதியா ரிருக்க தங்களுக்கு சம்மதி யில்லை யென்று சொன்ன ஞாயத்தை அறிந்த மேற்படி பீத்தர் துரை அந்த டாணாவை அவர்கள் ஊருக்கு வெளியே வைத்தான். அந்த டாணா 4 வரு. காலம் யிருந்துது. அதுவரையில் அவர்களுடைய யாதொரு சச்சரவும் வந்ததில்லை. அதை யறிந்த மேற்படி கலக்கட்டர் அந்த டாணா அவடத்தி லிருக்கிறது வீண் செல வென் றெண்ணி மேற்படி டாணாவை யெடுத்துப்போட்டான். அப்பேர்ப்பட்ட பிடிபாதமுள்ள சாதி யாகையால் இதுவரையில் அவர்கள் வியாச்சியம் வெள்ளைக்காறர் ஞாயஸ்தலத்தில் வந்ததில்லை. அல்லாமலும் அவர்கள் ஒரு துரைத்தனத்தாருக்கும் கையெடுத்து வணங்கிற தில்லை யதற்குத் திருஷ்ட்டாந்திரம் அவர்கள் பூர்வீகத்தைப் பேசும்போது விளங்கும்.

காடுகளை வெட்டி நஞ்சை முதலாய்ப் பயிரிட்டு வருகிரார்கள். தருசு நிரம் விஸ்தாரமா யிருக்குது. அந்த நாட்டி லிருக்கிற அவர்களுடைய தேவாலையம் துகை 7. அந்த சாதி பெண்பிள்ளைகள் கலியாணம் அல்லது மைத்த ஒரு சடங்கு நாளில் மாத்திரம் செகப்பு மாம்புள்ளி சேலை அல்லது பட்டு பிடவைகள் கட்டுகிறது. மைத்த யெந்த நாளும் வெள்ளை பிடவை பொதுப்பட யெல்லாரும் கட்டுகிறது வழக்கம். அவர்கள் மைத்த சாதியைப் போலே குசவம் வைத்து பிடவை கட்டுகிறது. ஆனால் முக்காலத்தில் மார் மூடுகிறதில்லை. இப்போது வெகு நாளாய் மாராப்புப் போடாமல் மாருக்கு குருக்கே ஒரு முந்தாணையால் கட்டிவருகிரார்கள். ஸ்திரி சாதிகள் காதில் குச்சுக் கடுக்கனும் கையில் மோதிரங்களும் கழுத்தில் திருமங்கிலியச் சறடுடன் பகத்துக்குப் பொன்னால் செய்த 3 அல்லது 4 கடுக்காய் கோர்த்து போட்டிருக்குறது. செத்தே யிளந்தையா யிருந்தால் கையில் கங்கணம் கைகட்டுப் பகளம் யிது முதலானதும் போட்டிருக்குரார்கள். பெண்பிள்ளைகள் யென்னேரமும் பருத்தி அரைக்கிறதும் பஞ்சை விக்கிறதும் நூல் நூர்க்கிறதும் இதுதான் அவர்களுடைய முக்கியமான வேலை. நூலை நூர்த்து அடுத்த கிறாமங்களில் வித்துப்போட்டு றாத் தங்காமல் வீட்டுக்குத் திரும்பிவிடுவார்கள். வீட்டில் சமையல் வேலையில் அவ்வளவு கவனமில்லை. சமையல் வேலை சத்தேறகுறைய ஆண்பிள்ளைகளே செய்துவிடுகிறது. பெண்பிள்ளைகளை விட ஆண்பிள்ளைகள் மெத்த நேத்தியாய் சமயல் செய்வார்கள்.

ஆண்பிள்ளைகளோ வென்றால் தமிழ்ப் படித்த[13] உடனே சமையல் பண்ணக் கத்துக்கொள்ளுகிறது. சமையல் பண்ணத் தெரியாதவன் அரிது. ஆண்பிள்ளைகள் மைத்த சாதியைப் போல தலையில் குடுமி வைக்கிறதில்லை. காது தொள்ளைக் காதா யிருந்தபோதைக்கும்

13 இந்த சாதியாருக்குத் தமிழ்ப்பாஷை(ஷ) சொந்தமானதால் தமிழ்தான் முக்கியமாய்ப் படிக்கிறது. ஆனால் பெண்களோ வென்றால் பாஷை(ஷ) படிக்கிறதில்லை.

சிலர் மெத்த அரிதாய் கடுக்கன் போடுகிறார்கள். செத்தே முதலாளியா மிருக்கிறவன் கையில் பொன் மோதிரம் போடுகிறார்கள். அவர்கள் ஊரி லிருக்கிற பெரிய மனுஷாள் தலையில் வண்டித் தலப்பாய் கட்டுகிரார்கள். மைத்தவர்கள் தலையில் முண்டாசு கட்டுகிறது. இடையில் ஒரு முண்டும் மேலே ஒரு 6 முழ வஸ்திரமும் போட்டுக்கொள்ளுகிறதுதா னவர்கள் உடைமானம். இப்போது வெளித்தேசங்களில் போய் மைத்த தமிழரைப் பார்த்து குதியொள்(?) வேஷ்ட்டி கட்டுகிறதும் ஒசந்த அங்கவஸ்திரம் போடுகிறதுமா மிருக்குரார்கள். ஆண்பிள்ளைகள் கலியாணம் பண்ணிக்கொண்ட பிறகு முத்திரை தானம் பெத்துக்கொள்ளுகிறது. அதர்க்குப் பிறகுதான் ருத்திராட்ச முதர்க்கொண்டு போட்டுக்கொண்டு பூசை பண்ணுகிறார்கள். நாட்டுக்கோட்டையா ரென் றழைக்கப்பட்டவர்களை யறியவேணுமானால் காது தொள்ளையாகவு மிருக்கும், அந்த அடையாளத்தினாலே யறியலாம்.

சோழநாட்டி லிருக்கும் காவேரிபட்டணமானது பூர்வீகத்தில் சோழராசா யிருந்த ராசதானிய பட்டணமா யிருந்தது. அவன் றாச்சியபாரம் பண்ணிவருங் காலத்தில் அந்த ஊரில் வாசம் பண்ணி யிருந்த வெள்ளாளர் தங்களுடைய செழூமையான யாபாரத்தினாலே அவர்களுக்கு செட்டி யென்கிற பேர் கொண்டிருந்தார்கள். றாசாவுக்கு முடிசூட்டுகிறது முதலாய் மேற்படி சொல்லியவர்களி லிருக்கும் பெரிய மனுஷன்தான் முடிசூட்டுகிறது. அப்படி யிருக்குங் காலத்தில் சோழராசாவின் குமாரன் மேற்படி செட்டிமார்கள் வெகு திரவிய சம மன்னரா யிருக்கிறதையும் அவர்க ளிருக்குங் குடியிருப்பு அரண்மனைக்கு சமானமான மாடமாளிகையா யிருக்கிறதையுங் கண்டு அவர்களைக் குறித்து விசாரணை செய்ததில் மேற்படியார்கள் இவ்வளவு தனாஷ்ட்டிய முள்ளவர்களா யிருக்கிறது மன்றி ராசா முதலான பெரியோர்களுக்கு கையெடுத்து தலைகுனிந்து வணக்கஞ் செய்யாத சாதியா மிருக்குரார்க ளென்றும் சொன்னார்கள். அதைக் கேட்ட றாசகுமாரன் சோதிக்கவேணு மென்று யெண்ணி தலைகுனிந்து

நுழையவேண்டிய ஏழு சின்ன வாசற்படியுள்ள ஒரு மிடத்தில் மேற்படியார்கள் தன்னை வந்து கண்டுக்கொண்டு போகும்படியாய் ஊரில் பறைசாத்தினான். அப்படி மேற்படியார்கள் அவ னிருக்கிற சாகைக்குள் நுழையும்போது யெதிரி லுள்க்கார்ந்திருக்கிற றாசகுமாரனுக்கு அவசங்கையாய் காலை முன்னே விட்டு நுழைந்து அவட மிருந்து திரும்பி வரும்போது முன் னுழைந்த மாதிரி செய்யாமல் தலைகுனிந்து பின்பக்கத்தை மேற்படி ராசகுமாரன் பார்க்கும்படியாய் திரும்பி வந்துவிட்டார்கள். இப்படி மேற்படி செட்டிமார்கள் செய்த அவசங்கைமின் பேரில் மேற்படி ராசகுமாரனால் தங்களுக்கு யாதொரு தெண்டினை வந்து சம்புவிக்கு மென்று யெண்ணி தாங்கள் வாசம் பண்ணும் மிடத்தை அக்கினியால் கொளுத்திப்போட்டு அதி லனேகம் பேர் விழுந்து செத்துப்போனார்கள். இன்ன மைத்த அனேகம் பேர் தங்கள் ஆஸ்திபாஸ்தியை கூடுமானவரைமி லெடுத்துக்கொண்டு மின்னமும் தாங்கள் வைத்துப் பூசை பண்ணிவந்த மரகதப் புள்ளையாரையும் யெடுத்துக்கொண்டு தேசாந்திரமாக தென்தேசம் நோக்கி தெக்கே மலையாளத்தில் கோட்டா ரென்கிற ஊரில் போய்ச் சேர்ந்து அவடத்தில் அரியூரான் யென்கிற பேரை வைத்துக்கொண்டு இன்னமும் நாளது வரையில் நேம நிஷ்ட்டை தப்பாமல் வேறே கொள்வினை குடுப்பினை, உம்பினை திம்பினை செய்யாமல் சுயம்மா யிருக்குரார்கள். நெருப்பி லிறந்துபோனவர்களின் வாலிய ஆண்பிள்ளைகள் 1011 பிள்ளைகள் தங்களுக்குப் படித்துக் குடுத்த ஒரு பிறாமண வாத்தியின் வசத்தி லிருந்தார்கள்.

அந்த காலத்திலே தெற்கே மதுரை நாட்டை ஆண்டு வந்த பாண்டிய றாசனானவன் தன்னுடைய தேசத்தில் மைத்த தேசத்தைப் போலே செட்டிமார்க ளில்லை யென்கிறதில் வெகு காலமாய் கவலைப்பட்டிருக்கிறதை மேற்படி பிள்ளைகளை காபந்து பண்ணியிருக்கிற பிறாமணன் அறிந்து அந்த பாண்டிய ராச னிடத்தில் மேற்படி பிள்ளைகளை அழைத்துக் கொண்டுவந்து விட்டபோது,

அவன் றொம்ப சந்தோஷமாய் அவர்களை யேத்துக்கொண்டு தா னிருக்கிற மதுரைக்கு கிழக்குமாய் வெள்ளாத்துக்கு வடக்குமாய் வைகையாத்துக்குத் தெற்குமாய்* தங்களுக்குத் தேவையான மிந்த மிடங்களில் அவர்கள் குடியிருப்பை தெரிந்துகொள்ளச் சொன்னான். இன்னமுஞ் சிலவிசை சில காலத்தில் தன் னாட்டை விட்டு அதிக வசதியான நாடுகளுக்கு போய்விடுவார்க ளென்று யெண்ணி அவர்கள் ஆண்பிள்ளைகள் மாத்திரம் வேறே யிடங்களுக்கு அலுவல் நிமித்தியம் போனாலும் அவர்கள் மாத்திரம் போய் ஒரு வருஷத்துக்குள்ளே திரும்பி மறுபடி வரவேணு மென்றும், பெண்பிள்ளைகளோ வென்றா லொருக்காலும் ஒட மேறி ஆத்துக்கரை போகக்கூடா தென்று அவர்களிடத்தில் பிறமாணிக்கம் வாங்கிக்கொண்டான். ராசாவானவன் தானும் அவர்களிடத்தில் வரியிறை வாங்கிறதில்லை யென்றும் தனக்கு முதலாய் அவர்கள் கைதூக்கி தலைகுனிந்து வணங்காமல் யிருக்கிறதை தான் சகித்துக்கொள்ளுகிறதாக பிறமாணிக்கம் அவர்களுக்கு பண்ணி குடுத்தான். அப்படியே அவர்களுக்கு ராசா குடுத்த நாடுகளில் தேவர்கோட்டை யென்கிற குப்பத்தில் முதல் குடியேறுநார்கள். தங்களை அழைத்துவந்து விட்ட பிறாமணனுக்கு றாசாவின் வெகுமதி கொடுக்கப்பட்டுது. மேற்படியார்கள் அந்த பிராமணனை தங்கள் குருக்களாக வைத்துக்கொண்டு அதுமுதல் நாளதுவரைக்கும் மேற்படி குருவின் பிதுற்களை மாத்திரம் தங்கள் குருக்களாய் வைத்து நடப்பித்துக்கொண்டு வருகிறார்கள். அந்த வாலிய ஆண்பிள்ளைகளுடன் பெண்பிள்ளைகள் வராததினாலே அந்த பிறாந்தியங்களில் கள்ளர், மறவர், சாணார், அகம்பிடியர், ஒட்டர் யிப்பேர்ப்பட்ட சாதிகளா மிருந்தபடியால் அந்த வகையில்த் தானே பெண்பிள்ளை கலியாணம் பண்ணிக்கொண்டார்கள். தங்களுக்குள்ளே போதுமானவரையில் பலுகிறதுக்கு யிட முண்டான பிறகு மேற்படி பெண்வழியைத் தள்ளிப்போட்டு சம்மந்தம் பண்ணுகிறதை

* ப-ர் குறிப்பு: இங்கு வடக்கு தெற்கு தவறாக வந்திருக்கின்ற தெனினும் மேலே சரியாகவே மிருந்தது.

தங்களுக்குள்ளே வைத்துக்கொண்டு தங்களுக்கு யிளையாத்தங்குடியா னென்ற பேரை வைத்துக்கொண்டார்கள். அல்லது அவர்கள் வெள்ளாழப் பெண்களை நிதிப்படி கலியாணஞ் செய்திருந்தால் தங்கள் நேமநிஷ்ட்டையை விட்டு மாமிஷதாரியா யாகமாட்டார்கள். ஆகிலும் இப்படி தனியாய் பிறப்பட்டு வந்திருக்கிற தங்களை நடத்திக்கொள்ள முறமை யில்லாததினாலே வேறே சாதியின் முறமையை யெடுத்துக்கொள்ளாமல் தங்களுக்குள்ளே ஆகவேண்டிய காரியத்துக்கு தங்கள் சாதி 10 பெரியோர்கள் செய்கிற தீமானப்படிக்கு தாங்கள் நடக்கிற தென்று ஒண்ணு கூடி பேசி தங்களுக்குள்ளே யொழுங்கு பண்ணினதுதான் நாளதுவரைக்கும் அந்த ஒழுங்கு நடந்து வருது. இவர்களுக்குள்ளே நாடோடியாய் கட்டுக்கடங்காமல் வந்தவர்கள் தங்களை விட்டு நீக்கிப்போட்டார்கள். அப்படி நீக்கப்பட்டவர்கள் அந்த தென் பிறாந்தியங்களில் தங்களுக்கு சுந்தரத்தா னென்கிற பேரை வைத்துக்கொண்டு சீவித்துவருவார்கள். இவர்க ளிரண்டு தரத்தார்களுக்கும் கொள்வினை கொடுப்பினையத்து நீங்கி யிருக்குறார்கள். இந்த ரெண்டு வகையாரும் ஒருவனைவிட ஒருவன் ஒசந்த சாதி யென்றும் ஒருவனை யொருவன் நிந்தித்து வருகிறான். மேற்படி நாட்டுக்கோட்டையா ரென்று அழைக்கப்பட்ட இளையாத்தங்குடியார் பாண்டிய ராசாவிடத்தில் சத்தியம் பண்ணிக் குடுத்தபடி நாளதுவரையில் தங்கள் ஸ்திரி சாதிகளை ஓடம் யேறி பிறத்தி யிடங்களுக்குப் போக யிடங் குடுத்து வரவில்லை. ஆனா லிந்தக் காலத்தில் வெளித் தேசங்களி லிருக்கிற தேவஸ்தலங்களாகிய திருவண்ணாமலை, தில்லை சிதம்பரம் இப்பேர்ப்பட்ட யிடங்களுக்கு தங்கள் ஸ்திரி சாதிகளை ஓட மேறவொட்டாமல் ஆத்தி லிறங்கி யழைத்துக்கொண்டு போகிறார்கள். முன்னாளி லிப்பேர்ப்பட்ட தேவஸ்தலங்களுக்கு அழைத்துப் போனதில்லை. இந்த காலத்திலும் தங்கள் ஸ்திரிகள் தேவஸ்தலங்களுக்கு போகிறதைவிட மைத்த யாதொரு சங்கதிக்கும் தங்கள் ஸ்திரிகளைப் போகவே விடுகிறதில்லை.

காவேரிப்பட்டணத்தி லிருந்த மரகதப்பிள்ளையாரை யெடுத்துக்கொண்டு மலையாளம் கோட்டத்து யென்கிற ஊரில் வந்து மிதுவரையில் வெள்ளாளர் ஆச்சார மாறாமல் அரியூளர் யென்ற பேரை வைத்துக் கொண்டிருக்குறவர்களுக்கும் மேற்படி இளையாத்தங்குடியார்களுக்கும் மேற்படி மரகதப்பிள்ளையாரை காவேரியப்பன்பட்டணத்தி லிருந்து மேற்படியார் கொண்டுவந்துவிட்ட முகாந்திரத்தை யிட்டு இவர்கள் ரெண்டு பேருக்கும் ஒருவருக்கொருவர் பங்காளிக்குள்ள பகை நீளித்து வருவதாலும் (பழைய சரித்திரம் சொல்வது போல) அக்காலத்தில் காவேரியப்பன்பட்டணத்தில் மிருந்த வேளாளர் வணங்கா மன்னரா யிருந்ததைப் போல் நாட்டுக்கோட்டையா ரென் றழைக்கும் இளையாத்தங்குடியார்களும் அதிகார முள்ள யெப்பேர்ப்பட்டவர்களுக்கு முதலாய் கையெடுத்து சிரசு வணங்க மரியாதை செய்யாததினாலும், வெள்ளாள ரிருக்கவேண்டிய வொழுங்குபடி வலங்கை அல்லது மிடங்கையிலும் சேராமல் பொதுமையா யிருப்பதாலும், வெள்ளாளரைப் போலே யேறக்குறைய ஆச்சாரமும் சறுவாங்கடசவரமும் அவர்களுக்குள்ளே முக்கியமாய் நடந்து வருவதாலும், வருவதை அறிவான் வெள்ளாள னென்று சொல்லும் சுலோகத்தைப் போலே மேற்படியார்களுக்குள்ளே முன்யோசினை றொம்பவும் விளங்குவதுனாலேயும் அவர்களை நேராய் சுயம்மான வெள்ளாள ரென்று சொல்லாமல்ப் போனாலும் கள்ளர், மறவர், தனத்த அகமுடையோர் மெள்ள வந்து வெள்ளாளனாவா னென்று சொல்லுமாம்போலே வெள்ளாளச் சாதியி லிருக்கும் அனேகம் வகுப்பில் இவர்களையும் ஒரு வகை வகுப்பான வெள்ளாள ரென்று சொல்லவேண்டுமே யொழிய மைத்தப்படி 'பிறாமணிக்கத்துக்[14]

14 பிராமணர் அல்லது பாப்பாரைக் குறித்து இவடத்தில் பேச முகாந்திரமில்லை. ஒரு உதாரணத்துக்கு மாத்திர முத(?)கிக்கொள்ளப்பட்டதே யொழிய வேறல்ல. ஆனால் அவர்களைக் குறித்து அவர்க ளின்ன சாதி யென்று யறியவேணுமானால் கிறந்தத்தி லிருக்கிற ஆதி பிராமணத்தைப் பார்த்தால் பிறாமணிக்கத்துக்குச் சொந்தமானவர்க ளின்னா ரென்று விளங்கும்.

குரித்தானவனை அனியாயமாய்க் கம்மாள ரென்று கூப்பிடுவது போலவும் பிறாமணர், சத்திராள், வமிசியாள், சூத்திராளென்றும் மிந்த 4 வகைச் சாதிமிலும் தொந்த மிராததுமாய் பிராமண யுற்பத்திமின் பூர்வீக மத்தவர்களான பாப்பாரை பிராமண ரென்று யெண்ணி கூப்பிடுவது போலே' மேற்படி மிளையாத்தங்குடியாரை மின்ன வகையா ரென்று அறியாமல் தங்கள் மனப்போக்குப்படி அனியாயமாய் அவர்களை சாணார்ச் சாதி யென்று கூப்பிடுகிறார்கள். அவர்கள் வாசம் பண்ணும் தென் பிறாந்திய வழக்கப்படி ஆண்பிள்ளைகள் காதறுத்து வளர்த்திருக்கிறபடியால் அவர்கள் தென் தேசத்து சாணாரைப் போலே பார்வைக்குத் தோத்தப்படுகிறபடியால் மேற்படியார்களை அறியாமையால் சாணா ரென்று மிகழ்ச்சியாய் சொல்லுகிரார்கள். இதுவுமன்றி தஞ்சை சமஸ்தானம், ஆறுக்காட்டு சுபா மிந்த பிராந்தியங்களி லிருக்கிற வலங்கையார் மேற்படியார்களை மிடங்கையர் பாரிச செட்டியைப் போலே யெண்ணி அவர்கள் ஊர் வீதிகளில் பல்லக்கு முதலான வாகனத்தில் யேறக்கூடா தென்றும் சோடு போட்டுக்கொள்ளக்கூடா தென்றும் மேற்படியார்கள் வந்திருக்கிற தேசங்களில் விக்கினம் பண்ணுகிரார்கள். பேசிவரும் மேற்படி மிளையாத்தங்குடியார்கள் தங்கள் நாட்டிலும் யாபார நிமித்தியம் தீவு, தீவாந்திர முதலாகிய அனேக மிடங்களும் செத்தேறக்குறைய ஆண் பெண்பிள்ளைகள் முதலாகிய அனவரும் 50000 சனம் வரைமி லிருக்குறார்கள். இவர்கள் தங்கள் நாட்டில் வெள்ளாண்மையும் யாபாரமும் செய்கிறார்கள். வெளித் தேசங்களிலொ வென்றால் யாபார மாத்திரம் நடப்பித்துக்கொண்டு வருகிறார்கள்.

இவர்க ளிடத்தில் பொய், மாறுபாடு முதலான மிப்பேர்ப்பட்ட கெட்ட குண மில்லை. றொம்ப நம்பிக்கை யுள்ளவர்கள். வீண்பேச்சுக் கிடங் குடுக்கிறதில்லை. யென்னேரமும் சம்பாதினையின் பேரிலே நினைவுள்ளவர்கள். தங்கள் உமிரை விட நாணைய மகாபெரிதா யெண்ணுகிறவர்கள். குடி, கூத்தி மிப்பேர்பட்ட கெட்ட குண மில்லை. ஞாய மில்லாமல் பெருமைக்குச் சிலவு பண்ணுகிற தில்லை. மேற்படி

சொல்லிய துற்குணங்களையுடைய யொருவனைக் கண்டால் தங்களை விட்டு நீக்கிப்போடுகிறது மன்றி மறுபடி யவனை நினையாமல் மறந்துவிடுகிறது. அவர்கள் கால்க்காசு முதலாய் வீணாய் விட்டுவிடாம லிருக்கிறது மன்றி நன்மை தின்மை யென்னுஞ் சடங்கு நாளில் தவிர மைத்த யெந்த நாளிலும் ஒருவன் வீட்டில் ஒருவனுக்கு சும்மாய் சாப்பாடு போடுகிறதில்லை. அப்படி சாப்பிட நேரிட்டால் தங்கள் குடுக்கல் வாங்கல் சிலவில் கணக்குத் தீர்த்துக்கொள்ளுகிறது. அவர்கள் கூட்டு யாபாரம் செய்கிற லாபத்தில் அனேகந் தற்மங்களைச் செய்கிறார்கள். அன்னங் குடுக்கிறது முக்கியமாய் நடத்துகிறார்கள். இப்பேர்பட்ட தற்மச் சிலவுக்கு பொதுவிலே அநேகந் திரவியங்களை சிலவழித்து வருகிறார்கள். மைத்த சாதிகளைப் போலே யிவர்களுக்குள்ளே கடசி பிறிவினை கடசி யென்கிறதில்லை. அவர்களுக்குள்ளே யிருக்கிற கட்டுப்பாட்டை விட்டு மீறி நடக்கப் பயப்படுகிறார்கள். இந்த வெள்ளைக்காறர் றாச்சிய பாரத்தில் அவனவனுக்கு மனச் சுகந்திரிக்க மிருந்த போதிலும் இந்தச் சாதியார் மாத்திரம் தங்கள் பெரியோர்கள் கட்டுப்பாட்டுக் குள்ப்பட்டு நடந்து வருகிறார்கள்.

மேற்படி சாதியார் 40 வருஷத்துக்கு முன்னே றொம்ப யேழையா யிருந்தார்கள். இப்போது சில வருஷ காலமாய் அவர்களிடத்தில் திறவியம்[15] உண்டான பிறகு வெளித் தேசங்களில்

15 சிவகங்கைச் சீர்மை ஆளுகையை உய்யத்தேவறுடைய பிள்ளைகளுக்கு குடாமல் வலுவாய் அபகரித்துக்கொண்ட சின்னமருதன், பெரிய மருதப்ப சேருவைக்காரர்க ளிடத்தில் நாட்டுக்கோட்டையா ரென்றும் இளையாத்தங்குடியாரில் சிலர் மெத்த பிறமாணிக்கமாய் புழக்கம் பண்ணி வருங்காலையில் பாஞ்சாளங்குறிச்சி ஊமையன் மேற்படி சேருவைக்காறர்கள் ஒத்தாசையினால் இங்கிலீசுக்காறர் அதிகாரத்தை விரோதித்து அனேகங் கொள்ளை, குலை முதலான துறாயுதங்களை செய்து வந்ததை அறிந்த இங்கிலீசுக்காறர் அந்த ஊமைய னென்கிறவனையும் மேற்படி சேருவைக்காறர்களையும் கைப்பிடியாய்ப் பிடிக்க யேதுவித்த சேதியை மேற்படி சேருவைக்காறர்க ளறிந்தவுடனே தங்கள் கசானா பொக்கிஷத்தை

பிறப்பட்டு யாபி(?) யாபாரம் செய்து வருகிறதால் அவர்களை செத்தேறக்குறைய லோக மெங்கும் அறிய மிடமுண்டாமிற்றுது.

அவர்கள் சுயப் பாஷை(ஷ)த் தமிழ். மேற்படி பாஷை(ஷ)யை அவர்கள் அவ்வளவு சாஸ்திர விகுதமாய்ப் படிக்காமல் கூடுமானவரையில் வாசிக்கவும் யெழுதவும் கணக்கு முதலானது வைக்கவும் படிக்கிறது. அவர்களுக்குள்ளே ஆண்பிள்ளைகள் சமைக்கத் தெரியாதவர்க ளரிது. அவர்கள் சாப்பிடும் கலத்துக்கு யெச்சி யில்லை. அவர்கள் சாதிக்குள் ஒருவன் சாப்பிட்ட கலத்தை கழுவிப்போட்டு மைத் தொருவன் சாப்பிடுகிறது அவர்களுக்குள்ளே வழக்கமாய் நடந்து வருது. நெல்லு முதலான மைத்த பிஞ்சைத் தானியங்களை யவர்கள் சாப்பிடுகிறது. மாடு தவிர ஆடு, பண்ணி முதலான மாமிசங்களையும் இன்னமு மைத்த மரகறிகளையும் வித்தியாச மில்லாமல் சாப்பிடுவார்கள். பறையர் முதலான யீங்கிஷமான சாதிகள் தவிர மைத்த மேன்குலத்தார்கள் அவர்கள் சாப்பிடுஞ் சாப்பாட்டை பார்க்கச் சகிப்பார்கள்(?). இவர்க ளிருக்கும் பிராந்தியங்களில் இவர்கள் வீடுகள் சிலது கல்லாலே கட்டப்பட்டதுமாய்

மேற்படி சேருவைக்காறருடைய நம்பிக்கையுள்ள மேற்படி நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் மூலியமாய் காளையார்கோவிலின் காட்டில் புதைக்கும்படி செய்தார்கள். 1802 ஆம் வரு. ஊமையனைப் பிடித்து கொல்லு முன்னுக்கு மேற்படி சேருவைக்காறர்களையும் பிடித்து இங்கிலீசுக்காறர்கள் கொண்ணுப்போட்டது மன்றி, மேற்படி சொல்லிய உய்யத்தேவன் மக்களுக்கு பட்டத்தைக் கட்டிவைத்தார்கள். மேற்படி நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் சுபாவத்திலே மெத்த புத்திசாலியானவர்களுமாய் நல்ல கட்டுப்பாடும் ரகசியங் காப்பாத்துகிறவர்களுமான சாதியானதால் மேற்படி யிடத்தில் புதைத்த திரவியத்தை ஒருவருக்குத் தெரியாமல் யெடுத்துக் கொண்டுவந்து தங்கள் விதப்படிக்கி பங்கு பிரித்துக்கொண்டு 7, 8 வருஷ காலம் வெளிக்காட்டாம லிருந்து, பிறகு கொஞ்சங் கொஞ்சமா யவடத்தில் தானே யாபாரம் செய்து, பிறகு பிறபலியமாய் வெளித் தேசங்களுக்கு முக்கியமா யாபாரஞ்

விஸ்தாரமாய் குச்சு வீடுகளுமா மிருக்குது. அவர்கள் வீட்டில் ஒரு விளக்கு வைத்தால் அந்த விளக்கின் வெளிச்சம் அந்த வீடு முழுதும் பிரகாசிக்கும்படியான விதமாக அவர்கள் வீடு கட்டப்பட்டிருக்கிறது.

தங்களுக்கு ஆகவேண்டிய காரியங்களை மெத்த உபாயமாய்ப் பெத்துக் கொள்ளுகிறவர்கள். மனத்திடமும் பட்டினி, பசி தாங்கிரவர்கள். யெப்போதும் அமரிக்கையைத் தேடுகிறவர்கள், தங்க ளிடத்தில் நாணையந் தப்பினவர்களுடன் மறுபடி யாதொரு தொந்தமத்தவர்களா மிருக்கிறார்கள். இந்தச் சாதியார் செத்தேறக்குறைய யாவரும் மா னிற முள்ளவர்களுமாய் கறுப்பு நிற முள்ளவர்களுமா மிருக்கிறார்கள். இவர்கள் சாதியில் யொருவராவது மிதுவரையில் கிறிஸ்து வேதத்தில் வந்ததில்லை.

ஆகையால் இந்தச் சாதியாரின் உற்பத்தியை யறிந்து யோசிக்கிறதைவிட இவர்கள் குணங்களையும் தங்களைத் தாங்கள் நடப்பித்துக்கொள்ளுகிற வகையையும் யோசிக்கு மளவில் இந்த யீந்தி (India) கொறொமொந்தால் (Coromandel) யென்னு மிடங்களி

செய்துவருகிறார்கள். மே லெழுதியபடி அவர்களுக் ககப்பட்ட திரவியத்தைக் குறித்து யாதொரு ஆதரவைக்கொண்டு ருசுப்பிக்கக் கூடாது.

ஆகிலும் மேற்படி சாதியார் செய்கிற யாபாரத்தில் அவ்வளவு அதிக லாபந் தேடாமலும் ஒசந்த வட்டிக்கு முதலாய் விடாமலும் அவர்கள் செய்கிற யாபாரத்தில் வரும் லாபத்தை அனேகம் பேர்வழிக்கு பிறிக்கப்படுது. இப்பேர்ப்பட்ட லாபத்துக்கு யாபாரஞ் செய்து வருகிறவர்களுக்கு மிவ்வளவு திரண்ட முத லுண்டாக யெவ்வளவு வருஷ காலம் வேண்டியது?, இந்த முப்பது வருஷத்துக்கு முன்னே மெத்த நிற்பாக்கிய முள்ளவர்களா யிருந்தார்கள். இவ்வளவு சல்தியாய், இவ்வளவு திரண்ட முத லுண்டானதுக்கு யேதோ யொரு துகை யவர்களுக்கு அகப்பட்டு தென்கிறதாக மெத்த யெளிதாய் நம்ப மிடங் குடுக்குது.

லிருக்கிற சாதிகளைப் பார்க்க இவர்கள் நல்ல குண முள்ளவர்க ளென்று முக்கியமாய்ச் சொல்லவேண்டியது.

முற்றிற்று

1847 ஆம் வரு.

கிடங்கு உ

1. வெலஞ்செட்டி முத்துக்கறுப்பன் செட்டி மிசமான் கூட்டாளி இராமன் செட்டி
2. தெனஞ்செட்டி னாறாயணசெட்டி கூட்டாளி அழகப்ப செட்டி இது ரெண்டும் பத்து வருஷம் மிருக்குது.

❖ ❖ ❖



நூலாசிரியர் **மா.கோபாலகிருஷ்ணன்** புதுச்சேரியில் 1940ஆம் ஆண்டு பிறந்து,
1958 வரை அங்குள்ள பிரெஞ்சுக் கல்லூரியில் படித்தபின்,
பிரான்சில் 1963ஆம் ஆண்டு பெளதிகம், பொறியியலில் பட்டம் பெற்று,
(தென்)வியட்நாமில் பேராசிரியராக வேலையேற்றார்.
தென்கிழக்காசியாவின் பல பாகங்களில் நீண்ட பிரயாணங்கள் செய்தது முதல்
தமிழ்நாட்டு வரலாற்றிலும் தமிழர் பண்பாட்டிலும் ஈடுபாடுகொண்டு
பல துறைகளில் ஆய்வு செய்து வருகின்றார்.

பாரிசில் கணினிப் பொறியியலாளராகப் பணிபுரிந்து,
ஓர்சேவில் ஓய்வு பெற்ற இவர் பட்டினப்பாலையைப்
பிரெஞ்சில் மொழிபெயர்த்திருப்பதும், கோலாலம்பூர், தைப்பே,
மொரீசியசு, பாரிசு, புடாபெஸ்த், ஐடெல்பெர்க் ஆகிய இடங்களில்
பல ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியிருப்பதும்
குறிப்பிடத்தக்கனவாகும்.

'**இரண்டாம் வீராநாய்க்கர் நாட்குறிப்பு** (1778–1792)' என்னும் வரலாற்று
ஆராய்ச்சிக் கருவூலத்தை 1992–ஆம் ஆண்டில் வெளியிட்ட பின்,
பல புத்தம்புதிய விபரங்களைக் கொண்ட
'**ஆனந்தரங்கப்பிள்ளை வி–நாட்குறிப்பு பிறசொற்பத்தி ஆண்டு** (1751–1752)',
'**ஆனந்தரங்கப்பிள்ளை வி–நாட்குறிப்பு ஆங்கிரச ஆண்டு** (1752–1753)'
ஆகிய நூல்களைப் பதிப்பித்திருக்கின்றார்.

'**நாட்டுக்கோட்டையாரின் உற்பத்தியும் அவர்களின் சாதியும் முறையும்**' என்னும்
இப்பதிப்பு 18ஆம் நூற்றாண்டின் முதற்பாதி காலத்திய முக்கியமான
சமூக விபரங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது.

நற்றமிழ் பதிப்பகம்